3L

R65m2 11, N11 VD

N27·17·9

186773

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை.

பிரபவ ௵ - ஆனி௴.

ஸம்புடம் 17.] [ஸஞ்சிகை 9

பத்ராதிபர்:— ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 19 JUL 1927

விஷய ஸூசிகை.

1. கம்பர் ஸ்ரீவைஷ்ணவ சமயத்திற்குச் செய்தருளிய பேருதவிகள்:—
ஸ்ரீ. திரு. அ. இராமகிருஷ்ண சடகோப தாஸர் ... 269
2. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தமஹிமை:—
ஸ்ரீ. உ.வே. வித்வான் குறிச்சி சேஷாத்ர்யாசார்யர் ஸ்வாமி ... 277
3. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் பரம தாத்பர்யம்:—
ஸ்ரீ. உ.வே. வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி ... 283
4. தமிழ்ப்பஞ்சாங்க ஆராய்ச்சி:—ஸ்ரீமான் கே. வி. நாராயணஸ்வாமி ஐயர் ... 291
5. கார்யதர்சியின் விஜ்ஞாபனம்:— 295
6. புஸ்தக விமர்சம். 296
7. பத்ராதிபரின் குறிப்புகள். 297
8. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் ... 57
9. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:— 57

JUNE 1927.

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

எல். என். ஜ்வல்லரி ஹவுஸ்

1/11 நல்லதம்பி முதலித்தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.

நம்பிக்கைக்குரித்தான
நகை வியாபாரிகள்.

குறிப்பிட்ட காலத்தில் நயமாகவும் நேர்த்தியாகவும், தங்கம், வெள்ளி நகை சாமான்களும், கல்லிழைத்த நகைகளும் தயாரித்துக் கொடுக்கப்படும். திறமையான வேலைக்காரர்களைக் கொண்டு செய்யப்படுவது. ஒருமுறை பரிக்ஷிக்கக் கோருகிறோம்.

சொந்தக்காரர்:—

ராவ்ஸாகிப் பி. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார், பி. ஏ.
ரிடையர்டு ஸால்டு அஸிஸ்டெண்டு கமிஷனர்,
ஏஜண்டு, திருவல்லிக்கேணி அஹோபில மடம்.

MADRAS
1927

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கிபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] ப்ரபவஹூ, ஆனிமீ [ஸஞ்சிகை 9

ஸ்ரீஸாவதக்ஷதம் தராருவணம் ரவிகரமளரவராம்பரம் தயாதே ।
வபுரலககாவ்ருதாநநாப்ஜெ விஜயஸவெ ரதிரஸ்து மெஜநவத்யா ॥
[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

கம்பர் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திற்குச் செய்தருளிய பேருதவிகள்.

(திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்.)

(தொடர்ச்சி—253-ம் பக்கம்)

இந்த ஒரு காரணத்தைப் பெரும்பாலும் கொண்டே தான் கம்பர் இராமாயணம் பாடினார். மக்கள் சமய வுணர்ச்சியில் பேதப்பட்டிருப்பதைக் கண்டு, அவர்கள் அவ்வாறு பேதப்படாதவாறு, வேதவேதாந்தங்களில் பேறப் படுகின்ற பரவஸ்துவாகிய நாராயணன், பிறப்பிறப்பில்லாத கடவுளே எனினும், சாதாரண அறிவுடைய உயிர்கள் தன்னை எளிதில் உணரும்படிக்கே விபவாவதாரங்கள் கொள்கின்றான் என்ற உண்மையையும், சீவர்களுக் கெல்லாம் அவ்வுணர்ச்சியைப் பெருக்கவேண்டு மென்பதையும், ஸ்ரீராமபிரான் பால் தமக்குள்ள பெரியதொரு பக்திவிச்வாஸத்தை நாட்டாரும் அறிந்துய்தல் வேண்டுமென்பதையும், "தெய்வம் ஒருவனே; அவனே நாராயணன்; அந்

186773
R 1359
N29.17.9

நாராயணனே ஸ்ரீராமனாக அவதரித்தான்” என்ற கொள்கையில் வந்த மக்கள், அவ்வுயர்ந்த குணத்திற் படிந்து, பிரமத்துவேஷம் பாராட்டாது, 'பக்தி' ஒன்றனையே மேன்மையாகக் கொள்ளவேண்டு மென்பதையும், நன்றாக ஆராய்ச்சி செய்துணர்ந்த கம்பர், அவையெல்லாவற்றையும் உயிர்கள் அறியும் பொருட்டே இராமாயணம் பாடினார் என்று அறிதல் வேண்டும். சடையப்பவள்ளல் வேண்டியும், வெகுநாள் வரைக்கும் கம்பர் இராமாயணம் பாடாது, பிறகு சோழன் பிரார்த்திக்க ஒட்டக் கூத்தனும் கம்பரும் இராமாயணம் பாடியதாகவும், கம்ப ராமாயணச் சிறப்பினைக் கண்ட கூத்தன், தனது இராமாயணத்தின் ஆறு காண்டங்களைக் கிழித்துப் போட்டதாகவும், கம்பர் கேட்டுக் கொண்டபடி, கூத்தன் உத்தர காண்டத்தை மட்டில் கிழிக்காமல் நிறுத்திக் கொண்டதாகவும்; கூறுங் கதைகள் வெறுங் கட்டுக்கதைகளே. ஒவ்வொன்றையும் துருவி ஆராய்ச்சி செய்தால் இவையெல்லாம் பொய்யென்றே நிச்சயித்துவிடலாம். கம்பர் உன்னத நிலைமையில் இருக்கும்போது, புகழேந்தி இளவயதினன்; புகழேந்தியின் முதுமைப் பருவத்தில், கூத்தன் குலோத்துங்கச் சோழனது சம்ஸ்தான வித்வானா யிருந்தான். திருக்கை வழக்கம், சரஸ்வதி யந்தாதி முதலியவை கம்பராற் பாடப்பட்டவை அல்ல. ஏரெழுபதை அவர் ஒருக்கால் தமது இளம் பருவத்திற்றானே பாடியிருக்கலாம். சடகோபரந்தாதி மட்டும் அவராற் பாடப்பட்டது என்பது, இராமாயணத்திற்கும் அதற்கும் உள்ள சில ஒப்புமைகளாற் பெறப்படும்.

சடையப்பவள்ளல் வேண்டுகோள்மேல் கம்பர் இராமாயணம் பாடியிராவிட்டால், அவனைப்பற்றி கம்பர், தம்நூலில் ஏன் பாடவேண்டும் என்பரேல்,

* 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'

என்ற அரும்பெரும் நீதியினை உணர்ந்த கம்பர், தன்னை ஆதரித்து வந்த புண்யவானுடைய பெயரை ஞாபகார்த்தமாக இரண்டோர் இடங்களில் குறிப்பிடுகின்றார். பெரும் புலவர்கள் தம்மை ஆதரித்தோர்க்குக் கடமைப் பாராட்டும் தன்மையினை Dryden, Goldsmith, Scot, Johnson, Tennyson, Arnold முதலிய ஆங்கிலப் புலவர்கள் நன்கெடுத்து மொழியும்மாற்றைக் காண்க. கம்பர் செய்தது நரஸ்துதியாகாதோ என்னில், ஒருக்காலும் ஆகாது. சடையப்ப வள்ளலின் பெருமையையும், தருமசிந்தனையையும், உலகம் உள்ளளவும் நினைத்துபோற்றவேண்டு மென்றே அவர் அப்படிச் செய்தாரென்க. மற்று; தாம்

* திருக்குறள் 1, 11, 10.

ஸ்ரீ ராமனது கல்யாண குணங்களில் மிக ஆழ்ந்த பக்தியோடு ஈடுபட்டதன்மையைக் கவரிக்கும்போது, உன்னத நிலைமைக்கும் உடரிய உணர்ச்சிக்கும் தாம் வந்தமையத் தம்மை உடன் இருந்து காப்பாற்றிய அப்பெருமகனை (சடையப்பவள்ளலை) தமக்குள்ள பிரீதியினாலே அவ்வாறு குறித்திட்டார் அல்லது, துதிக்கவில்லை யெனத் தெரிகின்றதன்றோ? ஆகவே அவர் செய்தது நரஸ்துதியாகாது என்றே கொள்ளல் வேண்டும். தம்மைக்காப்பாற்றிய சடையப்ப வள்ளலும், மற்றெல்லா உயிர்களும், ஸ்ரீராமபிரான்பால் பிரீதராய் அமைந்து உயர்நலம் பெறவேண்டு மென்றே, தாம் நெடுநாளாகக் கருதிவந்ததை, ஸ்ரீராமன்மேல் தமக்குள்ள பேரன்பின் துணைகொண்டு இராமாயணம் பாடினார். இதனை 1910 அல்லது 1911ம் வருஷத்தில் நடந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையில் ஸ்ரீ. நாராயணசாமி முதலியார் என்பார் ஒருவர் வலியுறுத்தி எழுதியிருக்கின்றார் என்று இப்போது எமக்கு ஞாபகம் வருகின்றது.* படித்தோர்க்கும் ஞாபகம் இருக்கலாம். ஆக இத்யாதிகளால், கம்பர் உலகநலத்துக்கும், தாம் இறைவனை அடைதற்குமே இராமாயணம் பாடினாரென்றுணர்க.

பிறர் சொன்னதைக் கேட்டு அவர் இராமாயணம் பாடினார் என்னும் அகச்சான்று ஏதும் இல்லை; பொய்யும் புளுகும் மலிந்த கர்ண பரம்பரைக் கதைகள் தவிர வேறே சரியான புறச்சான்றுமில்லை. சிறப்புப்பாயிரம் இரண்டாம் செய்யுளின் ஈற்றடியாகிய,

“.......................... ....அவர்,
நற்குணக் கடல் ஆடுதல் நன்றரோ.”

என்று கூறியுள்ளதை நோக்குங்கால், கம்பர் ஸ்ரீராமனது கல்யாண குணங்களை மிகப்போற்றுபவர் என்று வெளிப்படையாகவும், சற்று ஆழ்ந்து பார்க்கையில் “அப்பேர்ப்பட்டவருடைய கல்யாண குணங்களில் தாம் ஈடுபட்டதினாலே, அவர்பால் (ஸ்ரீராமன்பால்) உள்ள பிரீதி உள்ளடங்கப் பெறாமையால், அவர் வரலாற்றைப்பாடி உயர் நலம் பெறவேண்டும் என்றதொரு பேராசை தம்மைத் தூண்டத் தூண்ட, அவ்வாசை மிகுதியால், ஸ்ரீராமனது குணங்களாகிய பெருங்கடலிலே ஆடியாடி இன்புறற் பொருட்டே இந்த நூலை எழுதினார்” என்று குறிப்பினால் விரிந்து பெறப்படுகின்றதல்லவா? ஆகவே யாம் கூறிய தேவலி கொள்ளுகின்றதைக் காண்க.

இனி இந்த இராமாயணத்தைப் பாடிய கம்பர் எந்தச் சாதியினர் என்றும் நாம் கொஞ்சமாவது அறிந்துகொள்ளல் வேண்டும். கம்பர் சாதி

* இப்பத்திரிகையின் பெயர் எமக்கு ஞாபகமில்லை. பத்திரிகையும் கிடைக்கவில்லை. தெரிந்தோர் கூறுக!

யில் **வேளாளர்** ஆவர். வேளாளர் என்போர் அன்பிலும் தருமத்திலும் சிறந்து எவ்வகையினர்க்கும் கைம்மாறு கருதாது உதவி செய்பவர். "எந்நாளுங், காப்பாரே வேளாளர் காண்." * என்று கம்பர் தாமும் கூறுமாற்றை யறிக. வேளாளர், எல்லா உயிர்களிடத்தும் வஞ்சமில்லா நெஞ்சுபடைத்த கருணையைக் கைக்கொண்டவர்; 1 பிறர்க்கு இல்லை என்னாது, தம்முயிரை யுங் கொடுத்துக் காப்பாற்ற வல்ல பெருந் தன்மையைப் பெற்றவர். உழு தொழிலே அவரது முக்கியதொழில் என்றாலும், ராஜ சம்ஸ்தானத்திலும் பெரிய பதவிகளைப் பெற்றவர்களேயாம். அரசர்களாகவும் நாடாண்டவர்கள்; பெரிய நிலச் சுவாதீனக்காரர்களாகவும் (Zamindars) இருந்தவர்கள். குமணன், பாரி, வேள் எவ்வி சடையப்பவள்ளல் முதலியோ ரெல்லாம் வேளாளரே. நம் மாழ்வார்தம் தந்தையாகிய காரி யும வேளாளரே யாவர். வேளாளர் கல்வித் துறையிலும் மேம்பட் டிருந்தார்கள். சங்க காலத்தில், சிறு பான்மையான சமண புத்த புலவர்கள் போக, பெரும் பான்மையோர் வேளாளரும் பிராம்மணரும் ஆவர். வேளாளர்கள், ஆரியரால் வகுத்துரைக்கப்பட்ட சூத்திரர் ஆகார். பழந் தமிழ் நாட்டில், தொழில் முறைக்காக, அந்தனர், அரசர், வணிகர், வேளாளர், என மக்கள் பிரிவுபட் டிருந்தனர். சூத்ரர் என்போர் தமக்கு உயர்ந்தோர்க் கெல்லாம் குற்றேவல் புரியுந் தொழில் பெற்றோராய்த் தமக்கென ஓர் உரிமையும் உடைமையுங் கொண்டவர் அல்லர். மனுஸ்மிருதி 9-ம் அத்தியாயத்தின் கடைசியிலே 'பிராம்மணருக்கு ஊழியஞ் செய்தலே சூத்ரனுக்கு உற்ற தொழிலாம்' என்று கூறப்பட்டிருக்கின்றது. எனவே சூத்ரர் கொண்டது ஊழியத் தொழிலேயாகும். தமிழ வேளாளர், எவர்க்கும் எவ்வகை ஊழியத்தொழில் செய்தது எங்கும் பெறப்படாமையை யறிக. மேலும், அமரநிகண்டில், "குயவர், கொற்றர், கைக்கோளார், துன்னர், கொல்லர், தட்டார், தச்சர், ஓவியர், நாவிதர், வண்ணார், கூத்தர், பாணர், வேடர், கள்விற்போர், மாமிசம் விற்போர், ஏவலர், இழிகுலத்தோர், மடவோர்," முதலியவர்களே சூத்ரர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால், உயர்ந்த படிப்பினரும், நிலச்சுவாதீனக்காரரும், அமைச்சரும், அரசரும், அடியார்களுமாயிருந்த வேளாளர்கள் சூத்திரர் ஆகார் என்று பெறப்படும். மற்று, அவர் உயிர்குலத்தோ டொக்கும் கருணை நிரம்பிய தமிழ வேளாளரேயாம் என்றுணர்தல் வேண்டும். அது கிடக்க:

*கம்பர் தனிப்பாடல்.

1 "..
இன்மையாற் சென் றிரந்தார்க் கில்லையென்னா தீந்துவக்குந்
தன்மையார்.."

என்ற சம்பந்தர்தேவாரத்தைப் பார்க்க.

இனிச் சூத்திரன் என்ற பதத்தின் பொருளை விசாரிக்கு மிடத்து, சூத்ரன் என்பான் பிறர்க்கு ஏவல் செய்வோன் என்று பொருள்படும். 'மஹாபாஷ்யம்' என்னும் 'பதஞ்சலீயமும்' [1]இவ்வாறே இயம்புகின்றது. ஏவல் தொழில் என்பது அடிமைத் தொழிலாம். ஆர்ய சூத்ரர் என்னும் சூத்திர மக்கள் தமிழ் நாட்டில் தோன்று முன்னமே பழைய தமிழர்கள் இடத்து அடிமைத்தொழில் என்பது கிடையவே கிடையாது[2]. எனவே சூத்திரர் என்ற ஒருவகை சாதியார் தென்னாட்டில் பழைய காலங்களில் இருந்தார் என்பது இல்லை. தமிழ வேளாளர் மட்டில் அந்தண அரச வணிக சமூகத்தோர்களோடொத்துச் சமமாக வாழ்ந்திருந்தார். தொழின் முறையால் தமிழர் வேறுபட்டிருந்த போதினும், ஒவ்வொருவர்க்கும் உரிமையும் சுதந்தரமும் உண்டு. ஆதலாலே, அந்தப் பழமையான காலத்தில், ஆர்ய சூத்ரர்கள் (என்னும் சூத்திர குலத்தோர்) தென் இந்தியாவிற்கு எப்போதாவது வந்தார் என்பது சந்தேகமாய் இருக்கின்றது என்று பிறரும் [3] கூறுவதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதா யிருக்கின்றது. மேலும் 'சூத்ரன்' என்னும் பதம் தமிழ்மொழியாகாமையும் அறிக. ஆகவே சூத்திரர் வேறு; தமிழ வேளாளர் வேறு என்று பிரித்து உணர்தற் பாற்று.

இத்யாதிகளைக்கொண்டு, கம்பர் சூத்ரர் அன்றென்க. மற்று, அவர் தமிழ வேளாளரேயாம். தம்முடைய இளமைப்பருவத்தில் பாடியதாகச் சொல்லப்படும் 'ஏரெழுபது' என்னு நூலில் அவர் வேளாளரைச் சிறப்பித்துச் சொன்னது கொண்டும், "எந்நாளுங், காப்பாரே வேளாளர்காண்" என்றவர் தாமே கூறியது கொண்டும்,

4 "விழுப்பா ரினியெம்மை யார்பிற வித்துயர் மெய்யுறவந்
தழுப்பா தொழுமின் அருவினை காணும்மை யப்புறத்தே
இழுப்பா னொருவன்வந் தின்றுநி ன்றானிள நாகுசங்கம்
கொழுப்பாய் மருதஞ் சுலாங்குரு கூரெங் குலக் கொழுந்தே"

என்று சடகோபரைத் தம்முடைய குலத்தினர் என்று பாடியது கொண்டும் கம்பர் உண்மையில் வேளாளரே என்று துணிந்து கூறலாம். கம்பரை ஓச்ச

1. பதஞ்சலீயம்: பாணிநியார் அருளிய 'அஷ்டாத்யாயீ' என்னும் இலக்கண நூலுக்கு பதஞ்சலியார் எழுதிய வியாக்கியானம்.

2. 'Slavery is said to have been unknown among the ancient Tamils'. V. A. Smiths' Early History of India P. 441.

3. It is doubtful whether any Aryan Sudras ever came to South India. John D. Mayne's Hindu Law. P. 53.

4. சடகோபரந்தாதி செய்யுள் 26.

குலத்தோரென அறியாதாரே கூறுவர். புலவர் புராணம்பாடிய முருகதாசர் என்னும் தண்டபாணி யடிகள், அந்நூலில் கம்பரைப்பற்றிக் கூறும்போது, "கன்னன் பிறப்பும் பின்னுளிற் றுலங்கிற்றுக் கம்பன் பிறப்பறிந்தார் இலை இல்லை முக்காலும் இல்லை" என்றாரே என்னில், அப்புலவர் புராணம் என்னு நூல் உண்மையானதும் பொருத்தமானதுமான ஆராய்ச்சி நூல் ஆகாது. செவியளவில் கேட்டவற்றையே கொண்டு பாடப்பட்ட வர கவிகளையுடையது அந்நூல். மற்று,பாவலர் சரிதைபோன்ற சில நூல்களும் உண்மையான ஆராய்ச்சிக்கு இடந்தரா. இந்த நூல்கள் எல்லாம் பலபடியாகப் பிதற்றிக்கொண்டு செல்லும். இவைகளில் கம்பரைப் பற்றிய புனைந்துரை கதைகளும், பொய்க் கதைகளுமே மலிந்து இருக்கும். இந்தப் பொய் புளுகுகளை யெல்லாம் கட்டிக்கொண்டு திரிகிற சிலர், கம்பரை சூத்திரர் என்று இகழ்தலும், சூத்திரன் செய்த நூல், மஹரிஷி சேய்த காவியத்தோ டொக்குமா என்று பிதற்றுதலுஞ் செய்வர். இது தகாது. ஒருவன் எப் பிறப்போன் ஆயினும் அவனுக்குக் கல்வி மேம்பட்டிருந்தால்—அதனினும் சமய வுணர்ச்சியோடு பக்தி ரசக் கல்வி இருந்தால்—அவனை உலகம் விரும்பிப் போற்றும்.

1. "குலந்தாங்கு சாதிகள் நாலினுங் கீழிழிந் தெத்தனை
நலந்தா னிலாத சண்டாளர் சண்டாளர்க ளாகிலும்,
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணர்க்கா ளென்றுள்
கலந்தா ரடியார் தம்மடியா ரெம் மடிகளே."!

2. "..
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவு ளாரே!"

3. "பாதியா யழுகியகால் கையரேனும்,
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும்,
ஆதியா யவனையா யென்பாராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிகளாவார்:
சாதியால் ஒழுக்கத்தான் மிக்கோரேனும்,
சதுர்மறையால் வேள்வியாற் றக்கோரேனும்,
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே!"

1. திருவாய்மொழி 3-ம் பத்து, 7-வது பதிகம், 9-ம் திருவாய்மொழி
2. அப்பர்தேவாரம்; ஆறாந்திருமறை, தனித்திருத்தாண்டகம் 10 ம் செய்யுள்
3. திருவரங்கக் கலம்பகம்: செய்யுள் 15.

1. "எக்குடிப்பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக என்பார்."

என்ற செய்யுள்களை நோக்குக. ஆதலாலே, பரதேவதையான ஸ்ரீ ராமபிரானிடத்தில் மஹா பக்தசிரோமணியாய் விளங்கிய மஹாகவி கம்பரை, சூத்திரக்குலத்தோன் என்று அலக்ஷியமாகக்கூறல் ஆகாது என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். ஆதி கவியாகிய வான்மீகரைவிட கம்பர் எத்தனையோ இடங்களில், மக்கள் மனோபாவங்களுக்கு ஏற்ப கதை நயங்காட்டிச் செல்வதையும், ஸ்ரீ ராமனிடத்தில் தமக்குள்ள அபாரபக்தி விச்வாஸத்தைக் காட்டிச் செல்வதையும், இருநூல்களையும் பக்ஷபாதமின்றி ஒப்பு நோக்குவார்க்கே இனிது புலனாகும். 2 கம்பர் மஹாகவி; ஸ்ரீராமனது வரப்பிரசாதம் பெற்றவர். அவரை அலக்ஷியப் படுத்தக்கூடாது. சில நண்பர்கள், சூத்திரக் குலத்தோர் என்று மிகத் தாழ்மையாகவும் கேவலமாகவும் சொல்லும் மனிதர்கள் உள்ளே யாரேனும் ஒருவர் வேத வேதாந்தங்களை ஆராய்ந்து ஆழ்வார்கள் அருளிச் செயல்களை ஓதித் திறம்பட இருந்தாலும், அவரை ஏளனம் பண்ணுவதையும், அலட்சியப் படுத்திப் பேசுவதையும், யாம் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம். இப்படி அறியாதவராயும் மற்சராயும் இல்லாமல் யாவரையும் உடன் போற்றிவர எல்லா நண்பர்களையும் பெரிதும் பிரார்த்திக்கிறோம். அவ்வொற்றுமை இருந்தால்தான் நம்தேசம் எல்லாத் துறைகளிலும் மேம்பாட்டினைப் பெற்று விளங்கும். அதுகிடக்க.

இனிக் கம்பர் வடகலை தென்கலை நூல்களை யோதி, பரதத்துவ நிச்சயம் உணர்ந்து தாம் க்ருதார்த்தராம்படிக்கும், ஸ்ரீமந்நாராயண உபாஸனையை, (அஷ்டாக்ஷர மந்திர ஜபத்தை) உலகோர் அறிந்து உஜ்ஜீவிக்கும்படிக்கும், தாங்கொண்ட சமயகருத்து நிலைத்து நிற்கும்படிக்குமே செய்த இராமாயணத்தைக்கொண்டு, அவர் விசிஷ்டாத்துவைத சுத்த வைஷ்ணவராய் வைதிக சமூஹத்திற்குப் பேர் உதவியை, அதாவது நம்ம சமயம் மேன் மேலும் புதிய பலத்தைப் பெற்றுத் துலங்கும் பொருட்டுப் பத்திரங்கள் (records) போன்ற செய்யுள்களை, இராமாயணத்தில் ஆங்காங்கு எழுதிவைத்திருக்குமாற்றைக் காண்போம்.

அறிவால் உயர்ந்த பெரியோரது உட்கிடையை நோக்குவோமானால் மத வித்தியாசமே இராது என்னலாம்;

1. வெற்றிவேற்கை.
2. வான்மீகரும் கம்பரும் என்ற வியாஸத்தில் இவ்விஷயங்களைக் கூறுவாம்.
மற்சரர்—பொறாமையுடையோர்.

1. "தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பன்
யாரு மறியா ரவன் பெருமை—ஒரும்
பொருண்முடிவு மித்தனையே யெத்தவஞ்செய் தார்க்கும
அருண் முடிவ தாழியான் பால்."

என்ற பெரியதோர் உணர்ச்சியில் அன்னோர் ஆழ்ந்திருப்பர் ஆதலின். ஒருவன் என்றோதப்பட்ட அப்பொருளையே, பல சமயினரும், தத்தம் கருத்துக்கு ஏற்பப் பலவாறு திரித்துச் சொல்வர். ஸ்ரீ வைஷ்ணவர்கள் அப்பொருட்கு நாராயணன் என்ற திருநாமம் இட்டு வழங்குவர். சுருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களில் எல்லாம், அந்நாராயண சப்த வாச்யமே பிரதிபாதிக்கப் படுகின்றது. நாராயணனே ஸர்வ ஜகத் காரண கர்த்தாவாகிய முழுமுதற் பொருள் ஆவான் என்க. எனவே உபசாரமாகக் கூறப்பட்ட ஏனைத் தேவர்கள் எல்லாம் அப்பொருட்கு உட்பட்டவர்களேயாம். சில ஆதாரங்களைக்கொண்டு, சிலர், சிவன் முதலிய தெய்வங்களை உலக முதற் கர்த்தா என்பரேல், அவர் கூறிக்கொள்க. ஸ்ரீ வைஷ்ணவர்கள் தம்முடைய கருத்திலே ஈடுபட்டு அக்கருத்திலே பிரவர்த்திக்க! நாராயணக் கடவுளுக்கு அச்சிவனும் அந்தர் பூதனாயிருப்பதாலும், இது கொண்டு ஆழ்வாரும் (சடகோபர்) அநேக இடங்களில் விதி சிவாதிகளை உடன் படுத்தி அருளியிருப்பதாலும், ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிவனையும் அத்தெய்வத்தை வழிபடுபவர்களையும் துவேஷிக்காமல் இருக்க!

இனிக் கம்பர் துவேஷங்கொள்ளாத பெருமித சாந்தமானம் உடையவர்; எல்லா நூல்களையும் நன்காராய்ந்து, உண்மை உணர்ந்து, இறைவன் நாராயணனே என்ற சித்தாந்த உணர்ச்சியைக் கொண்டவர்; அந்த நாராயணன், உலக மக்கட்கு நன்மை உண்டாம் பொருட்டுத் தனது சுயேச்சையால் பல அவதாரங்களைக் கொண்டனன் என்ற உண்மையை அறிந்தவர்; அவற்றுள், ஸ்ரீராமாவதாரமே மிகச் சிறந்தது எனக்கொண்டு, அவ்விராமனது அனந்த திவ்ய குணங்களைக் கண்டநுபவித்த பெரிய பிரீதி வசத்தாலே தமது உட்கிடையை வெளியிடுகின்றார்.

(தொடரும்.)

1. நான்முகன் திருவந்தாதி: செய்யுள் 2.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த மஹிமை.*

(ஸ்ரீ உப வித்வாந் குறிச்சி சேஷாத்ர்யாசார்யர்.)

இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த மென்கிற ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமானது,

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ஸ்ருதிஹிதம் ராமாநுஜீயம் மதம் ॥ என்றும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

என்றும் [illegible] அருளிச் செய்தபடியே—[illegible] என்று [illegible] ப்ரமாணங்களுடைய [illegible]த்தாலும் [illegible]த்தாலும்,

[illegible] ।
[illegible]
[illegible] ॥

என்கிறபடியே மிகவும் ச்ரேஷ்டமானது.

இந்த ஸித்தாந்தார்த்தங்கள் தத்வம் ஹிதம் புருஷார்த்தம் என மூன்று விதங்கள். தத்வம் என்பது ப்ரமாணத்தால் அறியக்கூடியது. இது சித் அசித் ஈச்வரன் என்று மூன்று விதம். சித் என்பது ஜீவாத்மா. இந்த ஜீவாத்மாக்கள் பத்தர் முக்தர் நித்யர் என்று மூன்றுவிதங்கள்.

அசித்—என்பது த்ரிகுணம் காலம் சுத்தஸத்வம் என்று மூன்று விதம்.

* இது, சென்ற சித்திரை மாஸத்தில் ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில், முதல் திருத்திய ஸதஸ்ஸின் அக்ராஸநாதிபதியாக இருந்த ஸ்ரீ. உப. வித்வாந் சேஷாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸம். ஸ்ரீ. உப. வித்வாந் மோஹனூர் இடாம்பி ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் ஸங்க்ரஹிக்கப்பட்டது.

அசேதநம் என்பது ப்ரக்ருதி: மஹாந் அஹங்கார: ஜ்ஞாநேந்த்ரியங்கள் ௫, கர்மேந்த்ரியங்கள் ௫, மநஸ், தந்மாத்ரங்கள் ௫, ஆகாசாதி பஞ்ச பூதங்கள் ௫, ஆக ப்ராக்ருத தத்வங்கள் ௨௪ விதம்.

காலம் என்பது க்ஷணம் விநாடி கடிகை முகூர்த்தம் தினம் பக்ஷம் மாஸம் வருஷம் என்று எட்டு விதம்.

சுத்தஸத்வம் என்பது ஸ்ரீ வைகுண்டாதி ஸர்வ போகஸ்தாந போக்ய போகோபகரண தேஹேந்த்ரிய விஷய ரூபங்களாக இருக்கின்றது.

தர்ம பூத ஜ்ஞாநம் என்பது ஸ்வரூபஜ்ஞாநத்தைக் காட்டிலும் விலக்ஷணமாயும் த்ரிகுணத்ரவ்யம் முதலான மூன்றுவித அசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்ட த்ரவ்யமாயும் இருப்பதைச் சங்கித்து "இவ்வாத்மாக்களெல்லாருக்கும் தர்மி ஸ்வரூபம்போலே தர்மபூத ஜ்ஞாநமும் த்ரவ்யமாயிருக்க இதன் ஸ்வரூபத்தைத் தனித்து இங்கு அருளிச்செய்யாதொழிந்தது அசேதநமொன்று எடுத்த விசிஷ்டத்திலே விசேஷணமாய்ச் சொருகி நிற்கையடியாக" என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்திருக்கிறார்.

ஈச்வரன் ஸத்யஜ்ஞாநாநந்தாத்மக ஸ்வரூப நிரூபக யுக்தனாயும் ஜகதுபாதாந காரண நிமித்தகாரண ஸஹகாரியும் ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராத: ப்ரவேச நியமநைச்வர்ய கைவல்ய மோக்ஷாதி ப்ரதாந கர்த்தாவாயும் காருண்ய ஜ்ஞாந பலைச்வர்ய வீர்ய சக்தி தேஜ: ப்ரப்ருத்யநந்த கல்யாண குண கணங்களையும் பரவ்யூஹ விபவ ஹார்த்த அர்ச்சாவதார திவ்ய மங்கள விக்ரஹவானாயும், ஸ்ரீ நித்ய விபூதியுக்த னாயும் சேஷி சேஷணாயமாந ஸசேதநாசேதந விசிஷ்டனுமிருக்கும் உபாய ப்ராப்யனான ஸ்ரீமந்நாராயணன்.

ஹிதம் என்பது ஐச்வர்ய கைவல்ய மோக்ஷரூபமான புருஷார்த்தங்களுக்கு அநுஷ்டாந ஸாதநமானது. இதில் மோக்ஷஸாதநம் பக்திப்ரபத்திகள்.

புருஷார்த்தம் என்பது ஐச்வர்யம் கைவல்யங்களும் நித்யாநந்த ஸ்வரூப மோக்ஷமாகிற ப்ராப்யமும். இதை நமது மஹாதேசிகன் அருளிச்செய்தார்:—

ப்ரத்யேதவ்யஸ்த்ரிலக்ஷண: ப்ரக்ருதித ஆத்மா பதிரீச்வர:
தஸ்மிந்நாத்மபரார்ப்பணம் ஹிததமம் தச்சேஷவ்ருத்தி: பலம் |
இத்தம் தத்த்வஹிதே புமர்த்த இதி ச த்ரேதா விபக்தம் தநம்
தாயத்வேந தயாதநா: ஸ்வயமது: ந்யஸ்தாத்மநாம் தேசிகா: ||

ப்ரக்ருதித: ப்ரகிருதியைக் காட்டிலும் விலக்ஷண: விலக்ஷணனாக ப்ரத்யேதவ்ய: (ஜீவாத்மா) அறியக்கூடியவன். ஆத்மா ரக்ஷகனாகிய பதி: ஸ்ரீமந்நாராயணன், ஈச்வர: அந்த ஜீவாத்மாவைக் காட்டிலும் உயர்ந்தவன். தஸ்மிந் அப்படிப்பட்ட ஸர்வேச்வரனிடத்தில் ஆத்மபரார்ப்பணம் ஆத்மாவின் பரத்தை ஸமர்ப்பிப்பது, ஹிததமம் மிகவும் ஹிதமானது. தச்சேஷவ்ருத்தி: அந்த ஸர்வேச்வரனுடைய கைங்கர்யம், பலம் ப்ரயோஜநம். இத்தம் இந்த மாதிரி, தத்வஹிதே தத்வம் ஹிதம், புமர்த்த: புருஷார்த்தம் இதி என்று த்ரேதா மூன்றுவிதமாக, விபக்தம் பிரிக்கப்பட்ட, தநம் பொருளை அதாவது ஸம்ப்ரதாயார்த்தங்களை, ந்யஸ்தாத்மநாம் தங்கள் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்பட்ட ஆத்மாவையுடைய, ந: நமக்கு, தயாதநா: தயையையே தனமாகவுடைய, தேசிகா: ஆசார்யர்கள், தாயத்வேந தாயதனமாக (நமக்கு ஸ்வரூபத்தினாலேயே கிடைக்கவேண்டிய பொருளாக) ஸ்வயம் தாங்களே, அது: கொடுத்தார்கள்.

இந்த விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தால் நிர்ணீதமான ப்ரதாந விஷயங்களில் பரதேவதா பாரமார்த்யமாவது ஸ்ரீ விசிஷ்டனான நாராயணனுடைய ஸர்வோத்க்ருஷ்டத்வம் தான். இதற்கு ப்ரமாணங்கள். 'கோ த்யேய:' என்று மோக்ஷார்த்தமான த்யானத்துக்கு விஷயன் யாரென்று ப்ரச்நம் பண்ணிக்கொண்டு, 'காரணம் து த்யேய:' ஜகத்காரணமானவனே மோக்ஷார்த்தம் த்யேயம் என்று நிஷ்கர்ஷித்தான். பிறகு ஜகத்காரண வஸ்து யார் என்று விசாரிக்கும்போது 'அஸத்வா இதமக்ர ஆஸீத் தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே நாஸதாஸீத் தம ஆஸீத் ஏகோ ஹவை நாராயண ஆஸீந்ந ப்ரஹ்மா நேசாந: நேமே த்யாவா ப்ருதிவீ இத்யாதிகள் ஜகத்காரண வஸ்துவை நிரூபிக்கின்றன. ஜந்மாந்தர கர்மாநுகுணமான ஸாத்விகராஜஸ தாமஸாதிகாரிகளின் புத்திக்கு அநுரூபமாக ச்ருதிகளின் யதார்த்த நிர்ணயம் உண்டாகிறது.

"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந: |
ஸாத்விக: ஸது விஜ்ஞேய: ஸவை மோக்ஷார்த்த சிந்தக: ||"

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே ।
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥

என்கிறபடி ஜாயமான தசையில் மதுஸூதந கடாக்ஷமுள்ள ஸாத்விகோத்தமாதிகாரிக்கு தத்வநிர்ணயம் ஏற்படுகின்றது. அதன் ப்ரகாரத்தை ஸ்ரீ தேசிகர் அருளிச்செய்கிறார்:—

ஜீவைக்யம் தேவைக்யம் த்ரிகஸமயிநாம் தத்வைக்யம் த்ரயாணாம்
அந்யத்ரைஶ்வர்யமித்யாதி நிர்வாணஹேதி ஸாத்யம்தே ந ஸந்த: ।
த்ரய்யந்தே ரக்ஷகத்வ ஶ்ருத்யந்தரமணாத்ம வ்யாஸஸூத்ரோக்திஸித்த
ஶ்ரீமாந் நாராயணோ ந: பதிரகிலதநு: முக்திதோ முக்தபோக்ய: ॥

ஜீவைக்யம் என்பது ஜீவாத்மைக்யம் ஈஶ்வரனோடு ஜீவாத்மாக்கள் பரஸ்பரம் அபிந்நர்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது, 'நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாமேகோ பஹூநாம் யோ விததாதி காமாந் ॥' என்று ஜீவாத்மாக்கள் நித்யர்களென்றும் அநேகர்கள் என்றும் பகவான் நித்யனென்றும் ஜீவர்களுக்கு ப்ரபுவென்றும் சொல்லுகிற ஶ்ருதி ப்ரமாணங்களுக்கு விருத்தமாகையால் பாதிக்கப்பட்டது.

தேவைக்யம்—ஜீவாத்மாக்கள் அநேகர்களேயாகிலும் ப்ரஹ்ம ருத்ர சப்தங்களால் சொல்லப்படுகிற தேவதைகள், ஒரு ஆத்மாவுக்கு ராம க்ருஷ்ணாத்யவதாரங்கள் போல சரீரபேதமே தவிர ஆத்ம பேதமில்லையென்று சொல்லுகிறார்கள். இதுவும் பூர்வகர்மாநுகுணமாக அந்த தேவதைகளுக்கு ஸ்ருஷ்டி ப்ரகாரத்தைச் சொல்லுகிற 'யாநேதாநி நக்ஷத்ராணி ஸம்ஶ்ராவண: வஸந்த: யஶோஜ தத்ர மீமாம்ஸ:, இத்யாதி ஶ்ருதிகளுக்கும், இன்ன இன்ன யாகம் செய்தவர்களுக்கு இன்ன இன்ன தேவதா ஸ்தானம் என்றும் ஶதாஶ்வமேதம் செய்த ஜீவாத்மாவுக்கு இந்திரபதவி என்றும் சொல்லும் ஶ்ருதிவசனங்களுக்கும் விருத்தம்.

த்ரிகஸமயிமதா தத்வைக்யம்—ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்கள் ஸமர்களென்றும் மூன்று தேவர்களும் ஜகத்காரணமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இதுவும் ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஶாந: ப்ரஜாபதி: ந ருத்ரோ நாக்நீஷோமௌ நேமே த்யாவாப்ருதிவீ ந நக்ஷத்ராணி ந ஸூர்ய: என்று நாராயணன் மாத்திரம் ப்ரளய காலத்தில் இருந்ததாயும் ப்ரம்ம ருத்திராதிகள் அப்போது இல்லை யென்றும் பிறகு உண்டானதாயும் சொல்லுகிற ப்ரமாணங்களுக்கு விருத்தம்.

ஐக்யம் த்ரயாணாம் ப்ரம்ம ருத்திர விஷ்ணுக்கள் ஒரு ஆத்மாவின் ஶரீரபேதமே தவிர ஆத்மபேதமில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். இதுவும்

ந ஸந்தி ப்ரஹ்மணோ நாஶே ஶம்போஶ்சாபி ஸஹஸ்ரஶ: ।
ஶிவாம் தவாம் ச ஸம்ஹத்ய தத்ராக்ஷ் கேஶவ நாஶதாக: ॥
ஸ்ருஷ்டிம் ஸமாஶ்ரிதா தேவா: ஸ்ருஷ்ட்யா ப்ரஹ்மாண மாஶ்ரித: ।
ப்ரஹ்மா ஶரணமாஶ்ரித்ய நாஸங்கல்பி ஸ்வயமாஶ்ரித: ॥

என்கிற ப்ரமாணங்களுக்கு விருத்தம்.

அந்யத்ரைஶ்வர்யம்—ப்ரம்ம விஷ்ணு ருத்திர ரூபர்களான மூன்று ஆத்மாக்களும் உத்தீர்ணமான ப்ரம்மத்தின் கார்யபூதங்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இதுவும் (நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:) இத்யாதி ப்ரமாண விருத்தம்.

இத்யாதி—த்ரிமூர்த்தி மத்யஸ்தரான ருத்ரனே காரணமென்றும் மற்ற இருவரும் கார்யமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இதுவும் ந ப்ரஹ்மா நேஶாந: என்கிற ஶ்ருதிக்கு விருத்தம். இது முதலான அநிர்வசனீயர்களின் சொல்களை ஸாதுக்கள் ஆதரிக்கின்றனர் இல்லை. பேதஶ்ருதி அபேதஶ்ருதி கடகஶ்ருதிகளுக்கு ஐககண்ட்யத்தாலும் இதற்கு அபாதிதமான வ்யாஸர் முதலானவர்களின் ஸூக்திகளாலும் ஸ்ரீமந்நாராயண: அகில தநு: ஸமஸ்த சேதநா சேதநங்களை சரீரமாகவுடைய ஸ்ரீமந்நாராயணன் நமக்கு நாயகன் மோக்ஷஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பவன்.

[இந்த ஶ்லோகார்த்தத்தைக் கேட்பவர்கள் மனமுருகும்படியாக த்ருஷ்டாந்த தார்ஷ்டாந்திகங்களோடு அநேக ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதி வசனங்களை அதிரமணீயமாய் உபபாதித்து, திருமந்த்ரார்த்தத்தில் ஏற்பட்டிருந்த தனது அஸாதீய வாண்மித்யத்தை எல்லோரும் ப்ரமிக்கும்படி ப்ரகாசப்படுத்த ஸபையின் கரகோஷத்துடன் முடித்தார். அப்பொழுது

"பாஷ்யம் பஹு மஹாத்மநோ ஜயதி தத்ஸாம்ப்ரதாயிகோ மீமாம்ஸ:
வாக்யஜம் வததீதி வீக்ஷ்ய விபுதா: கோவதம் ஸத்யம் வச: ।
யம் ஶக்த்யா அபி ஸர்வதந்த்ர நிர்வாணம் ப்ராப்ய ஸ்வாதீநம் மதா:
வேதாந்தார்த்த ஸங்க்ரஹாய ப்ரஹ்மஸூத்ர பாஷ்யார்த்த ஸமுத்ராய ॥"

என்று புகழவும் பெற்றார்.]

பிறகு "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி" என்ற வாக்யத்தில் ப்ரம்மத்தின் லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் அந்த லக்ஷணம் உபபத்தி ஸித்தி

மோக்ஷம் லயம் ஆக நான்குக்கும் எதுகாரணமோ அதுதான் பிரம்மம் என்பது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ப்ரம்மம் காரணம் ஜகத் கார்யம் என்று ஏற்பட்டது. நம் ஸித்தாந்தத்தில் ஜகத்திற்கு உபாதாநம் ப்ரம்மம் நிமித்தகாரணமும் ப்ரம்மம்; காரணவஸ்துவிற்கும் கார்யவஸ்துவிற்கும் பேதம் இல்லை. அது எப்படியாகும் என்றால் எது மாறுதலடைந்து வேறொரு பொருளாக ஆகிறதோ அது மாறுதலடைந்த த்ரவ்யத்தைக் குறித்து உபாதாநகாரணம். சட்டிபானைகளைக் குறித்து மண் உபாதானம். யார் மாறுதலுக்குக் கர்த்தாவோ அவன் நிமித்தகாரணம். சட்டிபானைகளுக்கு குயவன் நிமித்தகாரணம். இந்த ஜகத்தின் விஷயத்தில் உபாதாநம் நிமித்தம் இரண்டும் ப்ரம்மமே. ப்ரம்மம் ஆத்மா; சேதநாசேதநங்கள் ப்ரஹ்மத்தின் சரீரம். ராமன் கிருஷ்ணன் என்கிற சப்தங்கள் எப்படி சரீரத்துடன் கூடிய ஆத்மாவைக் குறிக்கிறதோ அப்படியே ப்ரம்மம் என்கிற சப்தம் சேதநாசேதநங்களாகிற சரீரத்தோடுகூடிய ப்ரம்மத்தைக் குறிக்கிறது. இந்தசேதநங்களுக்கு ஸூக்ஷ்மாவஸ்தை என்றும் ஸ்தூலாவஸ்தை என்றும் இரண்டு அவஸ்தை உண்டு. ஸூக்ஷ்மாவஸ்தையாவது நாமம் ரூபம் இவையில்லாதது. ஸ்தூலாவஸ்தையாவது நாமம் ரூபம் இவையுள்ள அவஸ்தை. இந்த அவஸ்தைகளின் மாறுதலை ப்ரளயம் என்றும் ஸ்ருஷ்டி என்றும் சொல்வார்கள். இப்படி மாறுவதற்கு ப்ரம்மத்தின் ஸங்கல்பமே காரணம். தன்னுடைய சரீரமாகிற சேதநாசேதநங்களுக்கு இம்மாறுதல் உண்டாகிறபடியால் தானே உபாதாந காரணமென்றும் தன்னுடைய ஸங்கல்பத்தினால் உண்டாகிறபடியால் தானே நிமித்தகாரணம் என்றும் ஏற்படுகிறது. இப்படி காரணமும் தன்னுடைய சரீரம், காரியமும் தன்னுடைய சரீரமாயிருக்கையால் காரணம் காரியம் என்கிற இரண்டுவித அவஸ்தைகளும் ப்ரம்மத்திற்கே. இதனால்தான் இரண்டும் ஒன்று என்கிற வ்யவஹாரம் ஏற்பட்டது. இந்த அர்த்தத்தைத் தான் ஸம்ஸ்கிருதத்தில் பின்வருமாறு சொல்லுகிறார்கள். சேதநம் அசேதநம் இரண்டும் ப்ரம்மத்திற்கு விசேஷணம்; ப்ரம்மம் விசேஷ்யம்; விசேஷணத்துடன் கூடிய விசேஷ்யத்திற்கு விசிஷ்டம் என்று பெயர். ஸூக்ஷ்மசேதநாசேதந விசிஷ்ட ப்ரம்மத்திற்கும் ஸ்தூலசேதநாசேதந விசிஷ்ட ப்ரம்மத்திற்கும் உள்ள அபேதத்தை விசிஷ்டாத்வைதம் என்கிற சப்தம் காட்டுகிறது. இதுதான் விசிஷ்டாத்வைத சப்தத்தின் அர்த்தம்.

இவ்வர்த்தத்தை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்திகளனைவரும் நன்குணர்ந்து நமது ஸம்ப்ரதாயமே ஸகலஜகதுஜ்ஜீவக ஸம்ப்ரதாயமாகத் திருவுள்ளம்பற்றி ஆங்காங்கு ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநம் செய்து நமது ஸித்தாந்தமோங்கி வளரும்படியாக ஸ்வாமிகள் க்ருபை செய்யவேணுமாயும் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையானது நீடூழிவாழவேணுமாயும், ஸ்ரீ வல்வில் ராகவனை ப்ரார்த்தித்து உபந்யாஸத்தை முடித்தருளினார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் பரமதாத்பர்யம். *

(ஸ்ரீ. உப. வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி.)

ஸமஸ்த சேதநாசேதநங்களையும் சரீரமாகவுடைய ஸ்ரீமந் நாராயணனே பரதத்வமென்றும், அந்த சேதநாசேதந விசிஷ்டனாயிருக்கிற நாராயணனுடைய ஸஜாதீய விஜாதீய ராஹித்யமாகிற அத்வைத ரூப ஐக்யமே விசிஷ்டாத்வைதமாகையால் அதுவே பரமதாத்பர்யமென்றும், ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலும் தத்வதர்சிகளான ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகளாலும் ப்ரதிபாதிக்கப்படுகிறது. ச்ருதிகளில், ஈசாவாஸ்யத்தில் முதலில் ஈசாவாஸ்யமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய அர்த்தம், ஈசா ஸர்வநியந்தாவான ஈச்வரனாலே, எல்லா ஜகத்தும் வாஸ்யம், வ்யாப்யம் என்று. இதனால் ஸமஸ்த ஜகத்துக்கும் ஈச்வரனுக்கு சரீரமென்றேற்படுகிறது. இப்படியே ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம் இத்யாதியாலே சரீராத்மபாவம் ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. அப்படியே சாந்தோக்யத்திலும் மற்ற உபநிஷத்துக்களாலும் ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்வமஸி இத்யாதிகளாலே இந்த விஷயம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே ஸ்ரீமந் நாராயணனே பரதத்வமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்படியென்றால் ஸத் ப்ரஹ்மாத்மாதி சப்தங்களாலே ஜகத்காரணத்தைச் சொல்லி, ஏகோ ஹவை நாராயண ஆஸீத் என்று அந்த ஸத்ப்ரஹ்மாதி சப்தங்களுக்கு நாராயணனே வாச்யனென்று ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தாலே ஏற்படுகிறது. அப்படியே யேநாக்ஷரம் புருஷம் வேதஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் என்று ப்ரஹ்மசப்தவாச்யன் புருஷனென்று சொல்லப்படுகிறது. அந்த புருஷசப்த வாச்யன் ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ என்று தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ என்று புண்டரீகாக்ஷனாகச் சொல்லிற்று. அந்த புண்டரீகாக்ஷனும்

* இது சென்ற சித்திரை மாஸத்தில் ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் நடைபெற்ற இரண்டாவது நித்திய ஸதஸ்ஸுக்கு அக்ராஸநாதிபதியாக இருந்த ஸ்ரீ. உப. வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

நாராயணனுக்கே அஸாதாரணம். அது எப்படி யென்றால் தைத்யாரி: புண்டரீகாக்ஷ: என்கிற கோசத்தாலும் குறளில் "தாம் வீழ்வார் மென் தோளில் துயிலினிது கொல் தாமரைக் கண்ணனுலகு" என்று நாராயணனை புண்டரீகாக்ஷனென்று சொல்லி யிருப்பதாலும் ஶைவபுராணத்தில் விஷ்ணு தினந்தோறும் ஆயிரந்தாமரை புஷ்பங்களாலே சிவனை ஆராதித்ததாகவும் ஒருநாள் பரீக்ஷார்த்தமாக சிவன் ஒரு புஷ்பத்தை மறைத்து விட்டதாயும் அப்பொழுது விஷ்ணுவானவர் தான் ஒரு புண்டரீகாக்ஷனாகையாலே தன் கண்ணைப்பிடுங்கி அர்ச்சித்ததாகவும் அதனால் ஸந்துஷ்டனான சிவன் சக்ராயுதத்தைக் கொடுத்ததாயும் சொல்லி யிருப்பதாலும் நாராயணனுடைய புண்டரீகாக்ஷத்வம் பரமதத்திலும் சொல்லப்படுகிறது. மேலும் புருஷஶப்தவாச்யன் நாராயணனென்பது பாஞ்சராத்ர ஸம்ஹிதையிலும் ஸ்பஷ்டம். ஹ்ருத்யஸ்தே புருஷீபூய வர்த்ததே என்று இந்த நாராயணன் புருஷபதி யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வியாஸரும் விஷ்ணுஸம்ஹிதையில் பாஞ்சராத்ர ஸம்ஹிதையை உபயோகிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். காளிதாஸனாலேயும் ரகுவம்ஶத்தில் 13-வது ஸர்க்கத்தில்,

நாபிப்ரரூடாம்புருஹாஸநேந
ஸம்ஸ்தூயமாந: ப்ரதமேந தாத்ரா ।
அமும் யுகாந்தோசிதயோகநித்ர:
ஸம்ஹ்ருத்ய லோகாந் புருஷோऽதிஶேதே ॥

என்றும், காஶ்யப ஸம்ஹிதையில் ஸ்ரீ வத்ஸவக்ஷா: புருஷஶ்ச ஸாக்ஷாத் என்றும் புருஷஶப்தவாச்யன் நாராயணனென்று ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. மற்றும் வக்தவ்யாம்சங்களை விஸ்தரபயத்தால் நிறுத்திவிட்டேன். யத்வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜ மென்று ஶ்ருதியாலே ஸ்துதனாகச்சொல்லப்பட்ட மநுவினுடைய ஸ்ம்ருதியிலும் ஸோऽபித்யாய ஶரீராத் ஸ்வாத் என்றும் ஆபோ நாரா இதி ப்ரோக்தா: என்றும் இத்யாதிகளாலே நாராயணனே பரதத்வ மென்றும் விஶிஷ்டாத்வைதமே ஸித்தாந்தமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு வ்யாக்யாதாவான குல்லூகபட்டரும் இந்த ஶ்லோகங்களுடைய வ்யாக்யானத்தில் அநேந ப்ரகாரேண ஶ்ருதிஸ்ம்ருதிவேதாந்தேஷு இதமேவ ஸ்வரூபம் பவதி என்று சொல்லி யிருக்கிறார். வ்யாஸரும்

ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: ।
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா ॥

என்றும்,

ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே ।
வேதாச்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத் பரம் ॥

என்றும் இப்படி பலவிடங்களிலும் இந்த ஸித்தாந்தம் தனக்கு அபிமதமென்பதை வெளியிட்டிருக்கிறார். ஆழ்வார்களில் ப்ரதானரான நம்மாழ்வார், முதல் திருவாய்மொழியில் உடல்மிசை உயிரென கரந்தெங்கும் பரந்துளனென்று சரீராத்ம பாவத்தைச் சொல்லி, வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே என்று அப்படி சேதநாசேதந சரீரியா யிருக்கிறவன் நாராயணனே என்றும், அவனுடைய திருவடிகளே ப்ராப்ய மென்றும் மலர்மகள் விரும்பு நமரும் பெறலடிகள் என்று ஶ்ரிய:பதி யென்றும், இந்த அர்த்தத்தை நிரூபித்திருக்கிறார். பரோபதேஶ ஸமயத்தில் ஒன்றுந்தேவு என்கிற திருவாய்மொழியில் ஸம்ஸாரத்துக்கு ஹேதுவான தேவதாந்தரங்களில் பரதத்வ பங்கி யென்று நிச்சயித்து நாராயணனைத் தவிர மற்ற தேவதைகள் அபக்ருஷ்டர்களென்றும் அந்த நாராயணனையே ஆஶ்ரயிப்பது மோக்ஷ ஸாதனமென்றும் உபதேஶித்தார். இந்த உபதேஶ ப்ரபாவத்தாலே திருந்தின தத்காலீநர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அபிவ்ருத்திக்கும் பாவியா யேற்படுகிற ஸ்ரீ வைஷ்ணவ அபிவ்ருத்திக்கும் பொலிக பொலிக வென்று ஒரு திருவாய்மொழியாலே மங்களாஶாஸநம் பண்ணினார். அதில் முதல் பாட்டில் கலியும் கெடும் கண்டுகொள்மின் என்று பாவியான திருமங்கை யாழ்வாரவதாரத்தையும் நாதமுனிகள் ஆளவந்தார் ஸ்ரீ பாஷ்யகாரர் இவர்களுடைய அவதாரத்தையும் இவர்களாலே கலிகாலத்திற்குக் கெடுதலுண்டாகு மென்றருளிச் செய்தார். அப்படியே நாதமுனிகளுக்கு விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் உபதேஶித்து அந்த உபதேஶ ஸ்ரீ பாஷ்யகாரரளவும் அந்த ஸித்தாந்தம் ப்ரவர்த்தமாய் ஸ்ரீ பாஷ்யகாரருடைய பாஷ்ய ப்ரவசநாதிகளாலே எங்கும் பரவி ஓங்கித்தழைத்தது. இந்த விஷயத்தை

ருக்ஸாமாதர்வஸிந்தோ: ஶமிதபுஜக: ப்ராப்ய காருண்யநீரம்
நாதாத்ராவர்ஷிஷ்ட தத: ருஷபவரம் ஹோஜ அக்ஷுண்ணஸாராம்ஸ்யாம் ।
மத்வா தாம் யாமுநாப்யாம் ஸரிதமய யதீந்த்ராப்ய பத்ராகரேந்த்ரம்
ஸம்ப்ராப்ய ப்ராணிஸஸ்யம் ப்ரபவதி நிதராம் தேஶிகேந்த்ராம்புவாஹ
[ஜலதௌ: ॥

என்று பூர்வாசார்யர்கள் அருளிச்செய்தார்கள். இதற்கர்த்தம் 'ஆழ்வாராகிற காளமேகம் ஶ்ரிய:பதியாயிருக்கிற ஸமுத்ரத்தில் க்ருபையாகிற ஜலத்தைப் பாநம் பண்ணி நாதமுனிகளாகிற பர்வதத்தில் வர்ஷிக்க, வர்ஷிக்கப்பட்ட அந்தத் தீர்த்தமானது உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிகளாகிற

அருவிகளாக ப்ரவஹித்து ஸூதவதீமாராகிய பெரிய நதியில் சேர அந்த நதியால் நிறைந்த ஸாக்ஷீகாராராகிய வீரநாராயணபுரத்து ஏரிபோன்ற பெரிய ஏரியில் நின்றும் 74 ஸிம்ஹாஸநர்களாகிற மதகு களாலே புறப்பட்டு சேதநர்களாகிற பயிர்களிலே ப்ரவஹிக்கிற தென்று' என்பதுதான். அப்படியே தேசிகனும் நாயோவஜ்ஞம் ப்ரவரத்தம் என்று தொடங்கி ஸம்யக் ப்ரதம் யதீந்த்ர: என்று அருளிச் செய்தார். இப்படியே மணவாளமா முனிகளும் எம்பெருமானார் தர்சன மென்றே இதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார். அம்புவி யோர் இந்தத் தர்சனத்தை எம்பெருமானார் வளர்த்த அந்தச் செயலையார் காக்க என்றருளிச்செய்தார். அந்த ஸ்ரீ ஸாக்ஷீகாரரும் மாறனடி பணிந்துய்ந் தவனென்கிறபடியே ஆழ்வார் திருவடிகளை யாச்ரயித்து உஜ்ஜீவித்தவராய் பண்டை குமாரன் பசுந்தமிழாநந்தம் பாய் மதமாய் என்கிற பாசுரத் தின்படியே ஆழ்வாருடைய திவ்ய ஸூக்தியைக்கொண்டே பரமத நிரஸ நம் பண்ணினார். அப்படியே குறையில் பிரானடிக் கீழ் விள்ளாதவுள் என்கிறபடியே திருமங்கையாழ்வார் திருவடிகளில் ப்ரேமத்தை யுடையவ ராய் கலிமிக்க சென்றல் கழனிக் குறையில் என்கிற பாசுரத்தின்படி திரு மங்கையாழ்வாருடைய திவ்ய ஸூக்தியைக் கொண்டே பரமத நிரஸநம் பண் ணினார் என்பதுப் வ்யக்தம். இப்படி கலியின் கெடும் கண்டு கொண் மின் என்று ஆழ்வாராலே ஸூசிக்கப்பட்ட அவதார வைபவத்தை யுடையராய் கலியாரி கலித்வம்ஸ மென்று கலித்வம்ஸீ என்கிற திருநாமத்தை யுடையரா யிருந்துள்ள திருமங்கையாழ்வாராலே மங்களாசாஸனம் செய்யப்பட்ட இந்த திவ்ய தேசத்தில் இந்த ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த ப்ரவர்த்தநம் நடந்தது மிகவும் ஸ்லாகநீயம். இந்தத் திருமங்கையாழ்வார் இந்தத் திவ்யதேச விஷய மாக அருளிச்செய்த பாசுரம்.

அறிவதரியா னனைத்துலகு முடையா னென்னையாளுடையான்
குறிய மாணி யுருவாய் கூத்தன் மன்னியமருமிடம்
நறியமலர்மேல் சுரும்பார்க்க எழிலார் மஞ்ஞை நடமாட
பொறிகொள்சாறை வண்டிசைபாடும் புள்ளம்பூதங் குடிதானே.

மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவருக்குள்ளவாசி என்னவெனில்— ஆத்மாவை வெய்யிலிலே வைத்து உடம்பை நிழலில் வைத்துப் போந்தா ரொருவர். ஆத்மாவை வெய்யிலிலே வைக்கையாவது,

வாஸுதேவ தருச்சாயா நாதிசீதா ந கர்மதா ।
நரகாங்காரசமநீ ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே ॥

என்று சொல்லுகிறபடியே வாஸுதேவ தருச்சாயையில் தன்னை வைத் துக்கொள்ளாமல் அதற்குப் புறம்பான விஷயங்களில் வைத்து ஆத்மாவிற்கு தாபத்தை யுண்டுபண்ணினவர். அந்த வாஸுதேவ தருச்சாயையில் வைக்கையாவது அந்த ச்சாயையே தமக்கு உஜ்ஜீவநஹேது வென்கிற ஜ்ஞாந விசேஷம். இப்படி யிருந்துள்ள ஜ்ஞாநமில்லாமல் தேஹாத்மாபிமாநியாய் அந்த தேஹத்திற்கு போக்யமாக மற்ற விஷயாந்தரங்களுடைய ஸம்ஸர்க் களையே ஆதரித்து தத்விஷயமான காமத்தையே புருஷார்த்தமாக நினைத் துப் போந்தாரொருவர். இப்படி விஷயாந்தரங்களிலுண்டான ராஸிக்யமே பற்றாசாக தன்னுடைய விக்ரஹ ஸௌந்தர்யத்தை காட்டிக்கொடுத்து அதற்கு ப்ரதிபாதகமான திருமந்த்ரத்தையும் தானே யுபதேசித்து திரு தேவாயதநங்களுக்கு எல்லை நிலங்களாக உகந்தருளின நிலங்களில் தானிரு க்கும் இருப்பையும் காட்டிக்கொடுத்தான். அதுவே ஹேதுவாக விஷயாந் தர வைராக்யமுண்டாகி பகவத்விஷயத்தில் அபிநிவேசம் கரைபுரண்டு ஸர்வேச்வரனுடைய திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தில் ஆழங்கால்பட்டு விக்ரஹத்திற்கவ்வருகான திவ்யாத்மஸ்வரூபத்திலும் கண் வைக்காமல் தத்வி ஷயமான காமத்தையே புருஷார்த்தமாகவும் மோக்ஷத்திலும் ருசியில் லாதவரா யிருந்தார். பகவத்விஷய காமமாவது நிரதிசய ப்ரீதிரூபா பந்நமான ஜ்ஞாநவிசேஷமாகிய பக்தி. இப்படி யிருந்துள்ள பக்தியே நம்மாழ்வார் உலகு படைத்து உண்ட வெந்தை என்கிற பாசுரத் திலும் ஒன்றுண்டு. செங்கண் மால்யானுரைப்பது என்கிற பாசுரத்திலும், புருஷார்த்த மென்றும் மற்ற புருஷார்த்தங் களில் தனக்கபேக்ஷையில்லை யென்பதையு மருளிச்செய்தார். அப் படியே திருமழிசைப் பிரானும் திருச்சந்த விருத்தத்தில் கேடில் சீர் வரத்த னாய் என்கிற பாட்டிலருளிச் செய்தார். இதை யநுஸரித்தே இராமாநுஜ நூற்றந்தாதியில் திருவரங்கத்தமுதனார் சேம நல்வீடும் பொருளும் என்கிற பாட்டில் பகவத் காமரூபையான பக்தியே புருஷார் த்தம் அந்த புருஷார்த்தத்திற்கு சேஷபூதங்கள் மற்ற புருஷார்த்தங் கள் என்று எம்பெருமானார் அருளிச்செய்தாரென்று அருளிச்செய்திருக் கிறார். அப்படியே திருமங்கையாழ்வாரும் சிறிய திருமடலில் காரார் வரக் கொங்கை என்று தொடங்கி மேல் பாட்டுகளில் இந்த காமமே தனக்கபிமத மென்பதை வெளியிட்டார். மற்ற ஆழ்வார்கள் மயர்வற மதிநல மருளினன் என்கிறபடியே பகவத்கடாக்ஷ விசேஷத்தாலே பகவத்விஷய ப்ராவ ண்யம் உண்டாகி அதனுடைய பலமாக விஷயாந்தர வைராக்யத்தை யடைந் தவர்கள். இவ்வாழ்வார் விஷயாந்தரங்களை விபரீதமாக அநுபவித்து வந்த ராஸிக்யத்தை ஹேதுவாகக் கொண்டு ஸாம்ஸாரிக விஷயாந்தரங்களைக் காட்டி லும் தன்னுடைய விக்ரஹவைலக்ஷண்யத்தைக்காட்ட அத்தாலே விஷய வை

ஸாமர்த்யம் உடையவரானார். மற்ற ஆழ்வார்களுடைய வைராக்யத்திற்கடி கேவல பகவத் கடாக்ஷம்; இவருடைய வைராக்யத்திற்கடி ஸர்வேஶ்வரனுடைய விக்ரஹஸௌந்தர்யத்தை ஸாக்ஷாத்கரித்து அதில் காட்டிலும் இதற்குண்டான தோஷபூயஸ்த்வத்தை யறிந்ததுமை. ஆகையால் மற்ற ஆழ்வார்களுடைய வைராக்யத்திற்கும் இவர்களுடைய வைராக்யத்திற்கும் வாசியுண்டு. அதுவுமன்றி ஸம்ஶ்லேஷத்தில் வந்தால் முற்றூட்டாக பகவத்விஷயத்தை யனுபவித்தும் விஶ்லேஷ தஶையில் வந்தால் அவகாஶமும் அந்த வ்யஸனத்தைய நுபவிக்க வல்லவர்கள். இவர் ஸுகுமாரப்ரக்ருதியாகையாலே ஸம்ஶ்லேஷ தஶையில் தளர்ந்து கண்ணுஞ்சுழலையிட்டு இன்னதென்றறியேன் அன்னேயாழியொடு மென்று தடுமாறி நிற்பர். விஶ்லேஷ தஶையிலும் மடலெடுக்கு முதலான ஸாஹஸப்ரவ்ருத்தியை செய்ய உபக்ரமித்து அதுவும் நடைபெறாமல் தடுமாறுவர். இப்படி யிருந்துள்ள இந்த ஆழ்வார் கீழ் நும் மெத்தொழுதோம் என்கிற திருமொழியில் திருவிண்ணகரிலெம்பெருமானாகிய மருவினியமைந்தன் தனக்கு சடக்கென முகங்காட்டாமையாலே வந்த இன்னாப்பாலே வாசிவல்லீரிந்தளூரீர் வாழ்ந்தேபோம் நீரே என்று வெறுத்தார். அப்படிவெறுத்த இவருக்கு திருவெள்ளியங்குடியிலும் புள்ளம் பூதங்குடியிலும் தானெழுந்தருளி யிருக்கும் யிருப்பைக்காட்டி ஸமாதானம் பண்ண ஸந்நிஹிதராய் இப்படி யிருந்துள்ள ஸர்வேஶ்வரன் எழுந்தருளி யிருக்கிற விடமான திருவெள்ளியங்குடியே ப்ராப்யமென்று கீழ்த் திருமொழியிலநுஸந்தித்து அப்படியே புள்ளம்பூதங்குடியும் நமக்கு ப்ராப்யமென்று அநுஸந்தித்து இனியராகிறார்.

வாமனாவதாரத்திற்கு —அறிவதரியான் அறிவது பரிச்சேதித்தறிவதற்கு அரியவன் ஸ்வரூப ரூப குண விபூதிகள் எல்லாம் அபரிச்சின்னங்களாகையாலே இவைகளிலொன்றையும் பரிச்சேதித்தறிய முடியாதவன். வேதமும் ப்ரஹ்மாண்ட மொன்றையும் பேசப்புக்கு பேசமுடியாமல் யதோ வாசோ நிவர்த்தந்தே என்று மீண்டது. இதனால் நிரவதிகவைபவனென்றேற்படுகிறபடியால் பரத்வம் சொல்லப்பட்டது. அனைத்துலகு முடையான் எல்லா லோகங்களையு முடையவன். இத்தால் விபூதித்வயம் சொல்லப்படுகிறது. என்னையாளுடையான்—என்னை அடிமைகொண்டவன். அனைத்துலகு முடையான் என்னையாளுடையான் என்றருளிச் செய்தபடியால், அனைத்துலகு உடையனா யிருக்கையும் என்னை ஆளுடையனாயிருக்கையும் ஸமமென்றேற்படுகிறது. மேலும் அனைத்துலகு முடையான் என்னையாளுடையான் என்றிருப்பதால் இவரும் அந்த அனைத்துலகிலொருவரா யிருந்தபோதிலும் தனித்தருளிச் செய்தபடியால் அந்த உபயவிபூதியிலுள்ளாரைக் காட்டிலும் இவர் வ்யாவ்ருத்தரென்றேற்படுகிறது. அதில் நித்ய விபூதியிலுள்ளார் கேவலானுப-

வைகபரராய் விஶ்லேஷமறியாதவர்களாகையாலே இவருக்கொப்பல்லர். லீலாவிபூதியிலுள்ளாரில் பத்தர்கள் இவருக்கொப்பாக மாட்டார்களென்பது ஸ்பஷ்டம். முமுக்ஷுக்களில் இப்படி பரபக்தி தலையெடுத்த அதிகாரிகளில்லாமையாலே ஒப்பல்லர். ஆக அறிவதரியான் என்பதால் பரத்வமும் அனைத்துலகுமுடையான் என்பதால் ஸ்வாமித்வமும் என்னையாளுடையான் என்பதால் ஸௌஶீல்யமும் ஏற்படுகிறது. குறியமாணி யுருவாகிய கூத்தன் மன்னியமருமிடம். குறிய வாமனனாகிய மாணுருவாகிய ப்ரஹ்மசாரி யுருவாகிய கூத்தன் நர்த்தன யுக்தனானவன் பொருந்தி வர்த்திக்குமிடம். இதனால் வாமனாவதார வ்ருத்தாந்தம் சொல்லப்படுகிறது.

ஷைதத்ராபேந்த்ரயாச்ஞா விக்ஷதிவநயஸ்ய வாமநோபூத்வா ஸ ராவண:

என்கிறபடியே மஹாபலி உதாரனாகையாலே அவனை ஶிக்ஷிக்க முடியாமையாலும் இந்த்ரனுடைய யாச்ஞைக்குக் குறைவுவராமல் ஸ்ரிய:பதியான தன்னை இரப்பாளனாக ஆக்கிக்கொண்டு மஹாபலியினுடைய யஜ்ஞவாடத்தில் ப்ரஹ்மசாரியாய்த் தோடேபோய் கொள்வாய் மாவலி மூவடிதா வென்று ஸங்கீத ஸாஷணங்களைப் பண்ணி மகாபலியை யீடுபடுத்தி வாய்மாளப்பண்ணி சிறுகாலைக் காட்டி பெரிய காலாலே அளந்து மகாபலி தன்னுடையதென்ற அபிமானித்த த்ரைலோக்ய ராஜ்யத்தையும் தனக்காக்கிக்கொண்ட அவதாரமாகையால் எல்லா ஆழ்வார்களும் ஈடுபடும்படியா யிருக்கும். நம்மாழ்வார் சீரால் பிறந்து சிறப்பால் வளராது பேர் என்று ஈடுபட்டார். இவ்வாழ்வாரும் முன்னங்குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த மன்னன் சரிதைக்கு, மாலாகிப் பொன் பயந்தே என்று ஈடுபட்டார். ஆழ்வானும்

வஹஸி ஸ்ருதா ஜந்மனா அ தவ த்ரைலோக்ய கிம் ஶிக்ஷணார்த்ய பரதே

[ஸ்தவராஜஸ்தவம்]

என்றருளிச் செய்தார். மகாபலி தன்னுடையதல்லாத த்ரைலோக்ய ராஜ்யத்தைத் தன்னுடையதாக அபிமானித்துத் தன்னை ஸ்வதந்த்ரனாக நினைத்தது பண்ணின ஆத்மாபஹாரத்தை ஸ்ரிய:பதியான தன்னை இரப்பாளனாக்கி தன்னுடைய ஆத்மாபஹாரத்தைப் பண்ணி நிவ்ருத்திப்பித்தான். குறிய கோடியைக் காணியாக்கினாப்போலே அபரிச்சின்னமான விக்ரஹஸௌந்தர்யத்தை உகந்து ஸங்குசிதமாக்கலாம்படி வாமனனானபடி. மாணுருவாகிய-உண்டிடேன் இட்டபோதோடு இல்லை யென்று கதவு அடைத்தயே வாசியற முகமலர்த்தியோடு போகும்படி இரப்பாலே தகனேறின ஸூக்ஷ்மத்தை வரிஷ்டித்தபடி சொல்லுகிறது. கூத்தன்-இப்படி இந்த வேஷத்துடன் மஹாபலியின் யஜ்ஞவாடத்தில் சென்றது. வல்லாசாடினாப் போலே ஸுகஷ்டகமாயிருக்கையாலே கூத்தனென்கிறார். மன்னியமருமிடம்—இன்னமும் சேதநர்களு

டைய அவஸரத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டு ஆஸதே யத்ர வா ஸதா: என்கிறது போல் எழுந்தருளி யிருக்குமிடம் மேல் தேசவளப்பம் சொல்லப்படுகிறது. உகந்தருளின நிலங்களிலிருக்கிற மநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்கள் இங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய ஸௌலப்ய அநுபவத்திற்காக வந்திருக்கிற நித்யர்களும் முக்தர்களுமென்று ஸர்வே ஸ்தாவரஜங்கமாஸ்ஸ்யு: என்று பட்டரருளிச் செய்தபடியே நித்ய முக்தர்களாகையால் அவர்கள் தமக்கு உசிதமானபடி தோற்ற அருளிச்செய்கிறார். நறியமலர்மேல் சுரும்பார்க்க-சுரும் பென்பது வண்டின் அவாந்தரஜாதி. அந்த வண்டானது வாஸனையுள்ள புஷ்பத்தின் பேரில் அதிலுள்ள மதுவைப் பானம்பண்ணி சப்திக்க அதைக்கேட்டு அழகுள்ள மயிலானது நர்த்தனம் பண்ண தர்சநீயமான சிறகையுடைய வண்டானது இசைபாடா நின்றுள்ள புள்ளம் பூதங்குடிதான் உத்தேஶ்யம். இதற்கு ஸ்வாபதேஶம்-நறியமலர் என்கிறது. விகாஸ ஸுகுமாரமான ஈச்வரனுடைய திருமேனியைச் சொல்லுகிறது. அந்தத் திருமேனியினுடைய அநுபவத்தாலே ஷட்பதநிஷ்டர்களான பாகவதர்கள் ஸந்தோஷத்தால் ஆரவாரத்தைப் பண்ண அதைக்கேட்டு விசித்ரமான தோகையாகிற ஜ்ஞாநவிகாஸத்தை யுடையவர்கள் ந்ருத்யந்தி கேசித் என்கிறபடியே நர்த்தனத்தைப் பண்ணி ஸ்வரூபமதி ஸாயகமான சிறகு போன்ற தர்சநீயங்களான ஜ்ஞாநாநுஷ்டாநங்களை உடைய ஷட்பத நிஷ்டர்களான பாகவதர்கள் குணாநுபவத்திற்குப் போக்கு வீடாக கானம் பண்ணுகிற புள்ளம் பூதங்குடி. இத்தால் அவ்விடத்திலுள்ள குணாநுபவநிஷ்டர்களுடைய பரிமாற்றம் சொல்லப்படுகிறது. இப்படி ஆஶ்ரிதர்கள் தன்னையநுபவிக்கவும் விரோதிகளை வசீகரிக்கவும் ஆஶ்ரிதர்கள் உகந்தவிடமென்றும் அவனுகந்து தனக்கு ப்ராப்யமாக அத்யவஸித்து எழுந்தருளி யிருக்குமாப்போலே நமக்கும் அவனுகந்தருளின விடமே ப்ராப்யம். அவன் ஸ்வாராமான விமாநத்தால் தவ ப்ரியெ பொன்ற அஜீர்ணவாஸநாயினை அவஞ்ஜித்து ஸம்ஶ்ரிதஶ்ரீவிமாநாநி ஸூர்யாயாநி ஸதீக்ஷிணா மென்கிறபடியே ஆஶ்ரிதர்கள் திருவுள்ளங்களாகிற நடையாடும் விமாநங்களைப் பெற்று கல்லுங்கனைகடலும் என்றும் நின்ற தெந்தை யூறகத்து என்றும் சொல்லுகிறபடியே எழுந்தருளி இருக்கும் இருப்பிற்கு திவ்யதேசங்களில் இருப்பு ஸாதநமாகையாலே அந்த உபகாரஸ்ம்ருதியாலே அதைவிடாமல் வர்த்திப்பதுபோல் நாமும் அப்படியே ப்ராப்யமென்ற அத்யவஸித்து அவ்விடத்தில் வர்த்தநமே வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காளென்றும் நற்பாலயோத்தியில் வாழுமென்றும் கோயில்வாழும் வைட்டணவனென்றும் சொல்லுகிறபடியே யாவதாயுஷமாக அத்யவஸித்து அந்த உகந்தருளினதை விடாமல் வர்த்திக்க வேணுமென்ற தாய்த்து.

இப்படித் திருமங்கையாழ்வார் தமக்கு ப்ராப்யஸ்தலமாய அத்யவஸித்திருந்துள்ள இந்தத் திவ்யதேசத்தில் இந்த ஸம்வத்ஸரம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸம்ப்ரதாயத்தில் ஜ்ஞாதாக்களாயுள்ள பல திருநாமங்களுடைய உபய வேதாந்த விஷயமான உபந்யாஸங்கள் நடந்தபடியால் கலியின் கெடும் கண்டு கொண்மின் என்கிற ஆழ்வாருடைய மங்களாசாஸந ப்ரபாவத்தாலே இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் மென்மேலும் அபிவ்ருத்தமாகு மென்பது திண்ணம்.

ஸ்ரீ:

தமிழ்ப் பஞ்சாங்க ஆராய்ச்சி.

பஞ்சாங்கம் இன்னதென்பதும் அதன் உபயோகமும்.

(ஸ்ரீமான் கே. வி. நாராயணஸ்வாமி ஐயர்.)

ஜோதிட சாஸ்திரமானது இந்து சாஸ்திரங்களுக்கு நேத்திரஸ்தானமாயிருக்கிறது. அஜ்ஜோதிட சாஸ்திரத்திற்கு சூர்யன் சந்த்ரன் முதலான கிரஹங்களின் ஸ்தானங்களும், அஸ்வனி பரணி முதலான நக்ஷத்திரங்களின் ஸ்தானங்களும் தெரியவேண்டியதவசியம். இது விஷயங்கள் பஞ்சாங்கமென்ற ஒரு நூலிலிருந்து நாம் சுலபமாய் தெரிந்துகொள்ளக்கூடும். தவிரவும் பஞ்சாங்கங்களில் திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் பிரதி தினத்திற்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வைந்து விஷயங்களைக் கொண்டுதான் இந்துக்கள் தங்கள் சாஸ்திரங்களில் சொல்லியபடி தங்களுக்கேற்பட்ட சுபாசுப கிரியைகளை நடத்தி வருகிறார்கள்.

தற்காலத்தில் வழங்கிவரும் பஞ்சாங்கங்களின் நிலைமை:—அச்சு யந்திர சாலைகள் ஏற்பட்டது முதல் பஞ்சாங்கங்களின் ஸங்க்யை வருஷா வருஷம் ஜாஸ்தியாய்க் கொண்டுவருகிறது. அப்படியேற்பட்டிருக்கிற பஞ்சாங்கங்களுக்குள் திதியாதி விஷயங்களின் கால அளவைக் குறித்தும் கிரகங்களின் சாரங்களைக் குறித்தும் ஒன்றில் சொல்லியபடி மற்றொன்றிலில்லை.

உதாரணமாக மாதப் பிறப்பின் காலவிஷயத்தில் வாக்ய பஞ்சாங்கங்கள் ஒரு விதமாகவும் திருக்கணித பஞ்சாங்கங்கள் வேறுவிதமாகவும் சொல்லுகின்றன. இதனால் திருக்கணித பஞ்சாங்கங்களுக்கும் வாக்ய பஞ்சாங்கங்களுக்கும் தேதி வித்தியாசம் சில மாதங்களில் ஏற்படுகிறது. தென்னிந்தியாவில் அச்சிடப்படுகிற பஞ்சாங்கங்கள் எல்லாவற்றிலும் சித்திரை 7வ சுமாருக்கு ரிஷபாயனமென்றும் வைகாசி 7வ சுமாருக்கு மிதுனாயனமென்றும் இம்மாதிரி மற்றெல்லா மாதங்களிலும் நெடு நாளாய்ப் போட்டுவருகிறார்கள். அப்பஞ்சாங்கங்களிலொன்றில் சித்திரை 7வ சுமாரில் ரிஷபாயனத்தை யனுசரித்து விஷ்ணுபதியென்றும், வைகாசி 7வ சுமாரில் மிதுனாயனத்தை யனுசரித்து ஷடசீதி புண்ணிய காலமென்றும் ஆனி 7வ சுமாருக்கு கடகாயனத்தை யனுசரித்து தக்ஷிணாயன புண்ணிய காலமென்றும் இம்மாதிரி மற்ற மாதங்களில் மற்ற புண்ய காலங்களும் போடப்பட்டிருக்கின்றன. தவிரவும் வைகாசி முதல் தேதியில் 'சிலர் விஷ்ணுபதி'யென்றும் ஆனி முதல் தேதியில் 'சிலர் ஷடசீதி'யென்றும் ஆடி முதல் தேதியில் சிலர் தக்ஷிணாயனமென்

றும் இம்மாதிரி மற்ற புண்ணியகாலங்களும் அதே பஞ்சாங்கத்தில் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே ஸங்க்ரமண புண்ணியகாலங்கள் எல்லாவற்றுக்கும் சுமார் 23-நாள் கதி வித்தியாசமுள்ள இரண்டிரண்டு தேதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு தேதிகளுக்குள் பிரதி மாதத்திலும் 7௳ சுமாரில் அயனும்சத்தை அனுசரித்துப் போட்டிருக்கிற ஸங்க்ரமண புண்ணிய காலங்களை நாம் அனுஷ்டிப்பது சரியாவென்றும், மேஷரவி ரிஷபரவி முதலானவைகளை அனுசரித்து முதல் தேதிகளிலாவது முன்மாதங்களின் கடைசி தேதிகளிலாவது அனுஷ்டிப்பது சரியாவென்றும் விசாரிப்பது அவசியமாகும்.

விஷுவம் உத்தராயணம் தக்ஷிணாயனம் முதலிய சொற்களின் பொருளாராய்ச்சி:—விஷுவம் என்ற வடமொழிப்பதத்திற்கு அஹஸ் முப்பது நாழிகைகள் உள்ள தினமென்று பெயர். அயனமென்ற சொல், வழி பிறப்பு பாதையென்று பொருள் படும். ஆகவே உத்தராயணமென்றால் வடக்குப் பாதை, அல்லது சூரியன் வடக்கே நோக்கிச்செல்லும் பாதையென்று கொள்ளலாம். அதேமாதிரி தக்ஷிணாயனமென்பதற்கு சூரியன் தெற்கே நோக்கிச் செல்லும் பாதையென்றும் பொருட்கூறலாம். உத்தராயண புண்ணியகாலத்தன்று உள்ள அஹஸ்ஸின் பரிமாணம்மிக்க குறைந்ததாயும் தக்ஷிணாயன புண்ணிய காலத்தன்று உள்ள அஹஸ்ஸின் பரிமாணம் அதிகமாயும் இருக்க வேண்டும் என்றும் கணிதசாஸ்திரங்களிலிருந்து ஏற்படுகிறது. இவ்வஹஸ்ஸுகணக்கைக்கொண்டு மேற்சொல்லப்பட்ட ஸங்க்ராந்தி புண்ணிய காலங்களின் தேதி வித்யாசத்தைக் கவனிக்கும்போது பிரதிமாதமும் 7௳ சுமாரில் அயனும்சத்தை அனுசரித்துப் போடப்பட்டிருக்கிற ஸங்க்ரமண புண்ணிய காலங்கள் தான், சரியென்றும் மாதங்களின் கடைசி தேதிகளிலாவது முதல் தேதிகளிலாவது போடப்பட்டிருக்கிற புண்ணியகாலங்கள் தவறுதலென்றும் ஏற்படுகிறது. உதாரணமாக பங்குனி 7௳ யில் மேஷாயனமென்றும் சற்றேறக்குறைய அதேதினத்தில் அஹஸ்ஸு முப்பதுநாழிகை என்றும் போடப்பட்டிருக்கிறது. சித்திரை 1௳ யில் அஹஸ்ஸு 30 நாழிகையாகப் போடப்படவில்லை. அதேமாதிரி புரட்டாசிமீ 7௳ சுமாரில் துலாயனம் என்று போடப்பட்டிருக்கின்ற தினத்திற்கு அஹஸ்ஸு 30 நாழியாயிருக்கிறதே தவிர ஐப்பசி மாதத்தில் துலாவிஷு என்று போட்டிருக்கிற முதல்தேதிக்கு அஹஸ்ஸு 30 நாழிகையில்லை.

மேஷரவி மேஷாயனம் இவைகளின் பொருளாராய்ச்சி:—மேஷரிஷபாதி ராசிகளின் பெயர்கள் வேதங்களிலாவது அதுபோன்ற முதுநூல்களிலாவது காணப்படவில்லை இதிலிருந்து வேதகாலங்களில் நக்ஷத்ர மண்டலம் ராசிகளாக பகுக்கப் படவில்லையென்று ஏற்படுகிறது. ஆனால் கிரேக்கர்களைப் பார்த்து தான் நக்ஷத்திர மண்டலத்தை ராசிகளாக பகிர்ந்துள்ளார்களென்று இந்துதேச சரித்திரத்திலிருந்து ஏற்படுகிறது. ஆகவே மேஷ ரிஷபாதி பதங்களுக்கு கிரேக்கர்கள் முதலான மேனாட்டார் கொடுக்கும் பொருள்களை நாமும் கொள்ள வேண்டுமென்று ஏற்படும். அம்மேனாட்டார் மேஷரிஷபாதி ராசிகளின் பெயர்களுக்கு இருபொருள் கொடுத்திருக்கிறார்கள். (1) 30 பாகைகள் அடங்கிய வீடுகள் (2) அப்பெயர்களுக்கேற்ற மிருகங்களின் உருவங்கொண்ட நக்ஷத்திரக் கூட்டங்கள். மேஷமென்ற நக்ஷத்திரக் கூட்டத்திற்கும் மேஷமென்ற வீட்டிற்குமுள்ள (பாகை) கதி வித்தியாசந்தான் அயனும்சமென்பது. ஆகவே மேஷாயனமென்றால் மேஷமென்ற வீட்டிற்குச் சூரியன் வரும் சமயமென்றும் மேஷரவி என்றால் மேஷமென்ற நக்ஷத்திரக் கூட்டத்திற்குள் சூரியன் நுழையும் சமயமென்றும் நாம் பொருள் கொள்ள வேண்டும்.

மேஷமென்ற வீட்டிற்கு லக்ஷணமென்னவென்றால், அவ் வீட்டிற்குள் சூரியன் நுழையும் தினத்திற்கு அஹஸ்ஸு 30 நாழிகையாயிருத்தல் வேண்டும். அன்று சூரியன் நக்ஷத்திர மண்டலத்தில் காணப்படுமிடத்திலிருந்து உள்ள 30 பாகைகளுக்குத் தான் மேஷமென்றும் அடுத்த 30 பாகைகளுக்கு ரிஷபமென்றும் இம்மாதிரி மற்ற ராசிகளுக்கும் மேனாட்டார் பொருள் கொடுக்கிறார்கள். ஆகவே மேஷாயனம் ரிஷபாயனம் முதலியவைகள் மேஷரிஷபாதி வீடுகளுக்குள் சூரியன் நுழையும் சமயங்களைக் கொண்டு போடப்பட்டிருக்கிற சங்கிரமண புண்ணியகாலங்கள் என்றும் மேஷரவி ரிஷபரவி முதலியன மேஷரிஷபாதி பெயர்களுக்கேற்ற நக்ஷத்திரங்களுக்குள் சூரியன் நுழையும் சமயங்களைக் கொண்டு போடப்பட்டிருக்கிற சங்க்ராந்தி புண்யகாலங்கள் என்றும் ஏற்படுகிறது.

ஸாயன நிரயன கணக்குகளில் எது கிராகியம்?—ஸாயனப்படி வருஷமென்பது ஒரு சித்திரா விஷுவத்திலாரம்பிக்கிறது. ஒரு சாயன வருஷத்தின் நீளம் சராசரியில் 365 நாள் 14 நாழிகை 32 விநாடி ஆகிறது. நிரயனப்படி வருஷமென்பது சூர்யன் அசுவதிக்குள் நுழையும் சமயத்தில் ஆரம்பிக்கிறது. நிரயனப்படி ஒரு வருஷம் 365 நாள் 15 நாழிகை 31¼ விநாடி ஆகிறது. இவ்விரண்டு கணக்குகளுக்கும் வருஷமொன்றுக்குச் சுமார் ஒரு நாழிகை வித்தியாசமிருக்கிறது. அசுவதியில் சூர்யன் நுழையும் சமயத்தை வருஷப்பிறப்பென்று ஏற்படுத்தி சுமார் 1500 வருஷங்கள் ஆயிருக்கிறதென்று கணித சாஸ்திர விசாரணையிலிருந்து தெரிகிறது. மேஷத்தை அசுவதி முதலாக எண்ணவேண்டுமென்றும் அசுவதிக்குள் சூர்யன் பிரவேசம் செய்யும் காலத்தை வருஷப்பிறப்பென்றும் கி. பி. 5-வது நூற்றாண்டில் வராகமிஹிரரென்பவர் ஏற்படுத்தினார். அவரப்படி ஏற்படுத்தும்போது சித்திரை முதல்

தேதியில் அகஸ் 30 நாழிகையும் ஆடி முதல் தேதியில் மிக நீண்ட அஹஸ்ஸும், ஐப்பிசி மாதம் முதல் தேதியில் அகஸ் 30 நாழிகையும் தை மாதம் முதல்தேதியில் மிகக்குறைந்த அகஸ்ஸுமிருந்திருக்க வேணுமென்று காலஞ்சென்ற லோகமான்ய திலகர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள 'ஓரியான்' என்ற புத்தகத்திலிருந்து ஏற்படுகிறது. தவிர வராகமிஹிரருக்கு முன்பு மூன்று தடவைகள் வருஷப்பிறப்பை ருதுகாலங்களுக்கு ஒவ்வும்படி மாற்றியிருக்கிறார்களென்றும் ஏற்படுகிறது. ருதுவாதி காலப்பிரிவுகள் ஸாயனக்கணக்கைச் சேர்ந்தனவேயொழிய நிரயனத்தைச் சேர்ந்தனவல்ல. சித்திரை வைகாசி வசந்த ருது வென்றும், ஆனி ஆடி கிரீஷ்ம ருது வென்றும் இம்மாதிரி வருஷத்தை ஆறு ருதுக்களாக பகிர்ந்துள்ளார்கள். வருஷங்களுக் கேற்படுத்தியிருக்கிற 6 பிரிவுகள் வராகமிஹிரர் காலத்தில் தான் பிரதியக்ஷத்திற்குச் சரியாயிருந்திருக்கக் கூடுமேயொழிய இப்பொழுது சரியாயிருக்கா. அயனாம்சம் சுமார் 23 பாகைகளாயிருப்பதால் அந்த ருதுப் பிரிவுகள் இப்பொழுது 23 நாட்கள் தவறுதலாயிருக்கின்றன. மார்ச்சுமீ 22உக்குச் சரியான பங்குனிமீ 7உ சுமாரில் வசந்த ருது கிரமப்படி ஆரம்பிக்கிறபோதிலும் நமது பஞ்சாங்கங்கள் பிரகாரம் ஏப்ரல் 13-க்குச் சரியான சித்திரைமீ 1உ வரையில் வசந்த ருது ஆரம்பிப்பதில்லை. ஆகவே பிரத்தியக்ஷமாயுள்ள ருதுக்களுக்கும் பஞ்சாங்கங்களில் சொல்லியிருக்கிற ருதுக்களுக்கும் தற்காலம் 23 நாட்கள் கதி வித்தியாசமிருக்கின்றது. இதை சுமார் 10,000 வருஷங்களுக்குக் கவனியாது விட்டு விடுவோமானால் பஞ்சாங்கத்தில் உத்தராயண ஆரம்பமென்று சொல்லும்போது பிரத்திபக்ஷத்தில் தக்ஷிணாயனவாரம்பமாயிருக்கும். ஆகவே இது விஷயத்தை இப்பொழுதே கவனிக்கவேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது. ஹிந்துக்களாகிய நாம் வைதீக லௌகிக காரியங்கள் செய்யுமுன்னர் சொல்லிக்கொள்ளும் சங்கல்பங்களிலிருந்து ஸாயனந்தான் கிராஹ்யமென்று ஏற்படுகிறது. நாம் சிராத்தாதி காரியங்கள் அனுஷ்டிக்கும் திதியை கவனிக்கும்போது அவைகள் நிரயனப்படி சரியேயொழிய ஸாயனப்படி சரியல்லவென்று ஏற்படுகிறது. தவிர ஆடிப்பூரம், பங்குனி உத்திரம் முதலான உத்ஸவாதிகள் மாதாரம்ப வித்தியாசங்களினாலே மாறுபட்டு வருகின்றன.

முடிவு:—வருகிற விபவ வ்ருஷத்தை பங்குனி மாதம் 9-ந்தேதியே ஆரம்பிக்கலாமாவென்றும் சௌரமான மாதங்களை ஸாயனக்கணக்குப் பிரகாரம் ஏற்படுத்திக் கொள்ளலாமாவென்றும் தர்ம சாஸ்திரத்திலும் ஜோதிட சாஸ்திரத்திலும் தேர்ந்தவர்களைக்கொண்டு பரிசீலனைசெய்து தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது அவசியம். இது விஷயத்தில் எல்லா மடாதிபதிகளும் எல்லா ஹிந்து ராஜாக்களும் கவலை எடுத்துக்கொண்டால் காரியம் சீக்கிரம் முடிவுபெறும்.

ஸ்ரீ:

கார்யதர்சியின் விஜ்ஞாபனம்.

(1)

ஸ்ரீ. உ. வே. வெங்கடரமணய்யங்கார் ஸ்வாமியின் நன் கொடை.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஆதரவில் கோயமுத்தூர் ஜில்லாவில் நடை வருஷத்தில் நமது ஸித்தாந்தத்தைப்பற்றி ஆங்காங்கு ப்ரவசனஞ்செய்ய, பெரும் தாதாவான கோயமுத்தூர் ஸ்ரீ உ. வே. ஸி. வி. வெங்கடரமணய்யங்கார் ஸ்வாமி (எம். எல். ஸி.) ரூ 200 த்ரவ்ய ஸஹாயம் செய்திருப்பதைக்குறித்து ஸபையாரின் க்ருதஜ்ஞதையை அந்த ஸ்வாமிக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஸபையின் நிர்வாஹிகள் இத்ரவ்யத்தை சரியானபடி உபயோகித்து ஸித்தாந்தப் பிரவசனத்தை நடத்த சீக்கிரத்தில் யத்னிப்பார்கள். ஏற்கெனவே தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் இவ்விதம் ப்ரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இப்பொழுது கோயமுத்தூர் ஜில்லாவிலும் ஸ்ரீசரண்யனுடைய கிருபையால் இதற்கு ஏற்பாடாகி விட்டது, மற்ற ஜில்லாக்களிலும் இவ்விதம் நடத்த ஆஸ்திக ப்ரமுகர்கள் முன் வரவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

(2)

ஸ்ரீ வை. ஸி. ஸபையின் நடைவர்ஷத்திய சந்தாவை முன்னதாக மணியார்டரில் அனுப்பாத ஸப்யர்களுக்கு சென்றமாத வேதாந்த தீபிகை வி. பி. மூலம் அனுப்பநேர்ந்தது. பெரும்பாலும் வி. பி. அங்கீகரிக்கப் பட்டாலும் சில ஸ்வாமிகளுக்கு அனுப்பப்பட்டவை திரும்பிவந்து விட்டன. ஸ்வாமிகள் அந்தக் காலத்தில் ஸ்தலத்தில் இல்லாத காரணத்தாலும் மற்றும் சில காரணங்களாலும் இவ்விதம் நேர்ந்திருக்கலாமென்று தெரிகிறது. அவ்விதம் வி. பி. திரும்பிவந்த சந்தாதாரர்களுக்குக்கூட சென்றமாத ஸஞ்சிகையையும் இப்பொழுது புக்போஸ்டில் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது. அந்த சந்தாதார்கள் கிருபைபண்ணிக்கூடிய சீக்கிரத்திலேயே ஸரியாகச்சேரவேண்டிய சந்தாவை அனுப்ப வேண்டுமாய் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன், தீபிகையும் ஸபையின் மற்றக் கார்யங்களும் பெரும்பாலும் சந்தாவைக் கொண்டே நடத்தப்பட வேண்டியிருப்பதால், ஸப்யர்கள் இதில் சிறிதும் அச்ரத்தையின்றி சந்தாவை அனுப்பினால் பரமோபகாரமாக விருக்குமென்பதை இங்கு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஸபையின் முக்ய நிர்வாஹிகளில் சிறிது மாறுதலேற்பட்ட படியாலும், ஸபையின் நிர்வாகவிஷயங்களில் அவர்கள் புதிதானபடியாலும், மற்றும் சில விலாச மாறுதல்கள் சரியானபடி அறிக்கப்படாததாலும், சந்தாவைச் சமீபத்தில் செலுத்திய இரண்டொருவர்களுக்குக்கூட வி.பி. தவறுதலாய் அனுப்பப்பட்டது குறித்து மிக வருந்துகிறோம். அந்த ஸ்வாமிகள் இதை க்ஷமித்தருள வேண்டுகிறோம்.

சே. லக்ஷ்மீநரஸிம்மாசார்யர்,

கார்யதர்சி.

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

ச்ருதப்ரகாசிகையுடன் கூடிய ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பின் 5-வது ஸஞ்சிகை நாம் வரப்பெற்றோம். திருச்சி ஸம்ஸ்க்ருத பண்டிதர் வித்வான் தட்டை ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் மொழிபெயர்க்கப்பட்டு ஸ்ரீரங்கம் ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு ஸங்கத்தால் இது ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றது. வேதாந்த சாஸ்த்ரத்தில் வைதுஷ்யத்தையும் தமிழில் உபயுக்தமான அம்சத்தில் ஜ்ஞாநத்தையும் உடைத்தாயிருக்கும் பண்டிதர்களுடைய க்ருதிகள் ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸாதுவாக இருக்கின்றனவென்று சொல்லவும் வேண்டுமோ? இந்த ஸஞ்சிகையின் விலை ரூ. 1—8—0. அபேக்ஷிக்கிறவர்கள் "T. D. இராமஸ்வாமி நாயுடு, திருப்புறம்பயம் P. O. கும்பகோணம்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ப்ரபவ௵ ஆடி௴ (1927 ஜூலை—ஆகஸ்டு.)

ஜூலை	16	ஆடி	1	ச.	த்வி.	38-39	திருவோ.	35-0	கடக, ஸங்க்ரமணம்.
,,	18	,,	3	தி.	சது.	27-15	சத.	27-42	கடக க்ருஷ்ண சது.
,,	19	,,	4	செ.	பஞ்.	21-11	பூரட்.	23-39	கடக க்ருஷ்ண பஞ். ஷ. திதித்வயம்.
,,	24	,,	9	ஞா.	ஏ.	48-39	க்ருத்.	5-53	ஏகாதசி.
,,	28	,,	13	வி.	அமா.	44-29	புநர்.	5 55	அமாவாஸ்யை.
ஆகஸ்டு	1	,,	17	தி.	சது.	59- 6	பூரம்.	24-20	திருவாடிப்பூரம்.
,,	8	,,	24	தி.	தச	20-34	கேட்.	59-31	கடக சுக்ல ஏகா. திதி.
,,	9	,,	25	செ.	ஏ.	20-20	மூல.	60—0	ஏகாதசி வ்ரதம். த்வாதசி திதி.
,,	11	,,	27	வி.	த்ர.	16- 5	உத்.	58-13	ஸ்ரீ ஆளவந்தார் திரு.
,,	13	,,	29	ச.	பூர்.	7-40	அவி.	52—8	தைத்திரீய யஜுருபாகர்ம. காயத்ரி ஜபம்.
,,	14	,,	30	ஞா.	ப்ர.	2-26	சத.	43-20	கடக க்ருஷ்ணத்வி.
,,	15	,,	31	தி.	த்ரு.	51- 5	பூரட்.	44-11	கடக க்ருஷ்ணத்ரு.
,,	16	,,	32	செ.	சது.	44-39	உத்.	39-49	ஸிம்ஹரவி—54-28.
,,	17	ஆவ	1	பு.	பஞ்.	33-35	ரே.	35-37	ஸிம்ஹ ஸங்க்ரமண ச்ராத்தம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ரங்கநாதஸிம்ஹவரப்ரஹ்மணே நம:
யோகஜ: ப்ரவிஶ்ய ஸவாதஶோ ப்ரஸூதாம்
ஸஞ்ஜீவயத்யவிருஶக்தியா: வ்யாநா ।
அநந்தாம்ஶு ஹஸ்த அரண ஶ்ரவணஸ்வமாநீந
ப்ராணாஹ்வோ ஹமவதே வ-ஷாய த-ஹ்யா ॥

பத்ராதிபரின் குறிப்புகள்.

பம்பாயில் திவ்யதேச ப்ரதிஷ்டை. சென்ற வைகாசி மாஸம் 28-உயில் பம்பாய் நகரத்தில் நடை பெற்ற திருவேங்கடமுடையான் ஸந்நிதியின் திருப்ரதிஷ்டை விஷயமாக ஒரு ப்ரகடந பத்ரிகையை நாம் வரப்பெற்றோம். ஆனால் அது காலம் அதீதமாகக் கிடைத்த படியால் அதைச் சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்ய ஸாத்யமில்லாமல் போய்விட்டது. அப்படிப் போய்விட்டதைப் பற்றி நமக்கு இருக்கும் சோகத்தை இதன் வழியாக வெளியிடுகிறோம்.

மஹா ஜநங்களின் ஹிதத்தை உத்தேசித்து, பெருமாள் கோயில் ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்ய ஸ்வாமி சில ஸம்வத்ஸரங்களாக இந்தக் கைங்கர்யத்தில் ப்ரவ்ருத்தித்திருந்தாரென்றும், பகவத் க்ருபையால் அந்தக் கைங்கர்யம் முழுவதும் இப்பொழுது பூர்த்தியை அடைந்ததென்றும் நாம் அறிகிறோம். அநேக லக்ஷ ரூபாய்கள் இதன் விஷயமாக இதுவரையில் செலவாகி யிருக்கிறதாம். ஸந்நிதி நிர்மாணம் முழுவதும் சில்ப சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ள ப்ரக்ரியையை அநுஸரித்துச்செய்யப்பட்டிருக்கின்றதாம். பற்பல தேசங்களிலிருந்து பற்பல வர்ணங்களையுடைய சிலைகளைக் கொண்டுவந்து அவைகளில் விசித்ரமான வேலைகளைச் செய்து ஆலயத்திற்கு அதிரமணீயமான ஸம்ஸ்காரத்தை அதன் நிர்மாதாக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்களாம். இந்த ஸமாசாரத்தைக் கேட்க நமக்கு அளவற்ற ஸந்தோஷம் ஜநிக்கின்றது. கால தேச விப்ரகர்ஷாதிகளாலே பர வ்யூஹ விபவ அந்தர்யாமி என்று சொல்லப்படும் நிலைகளில் எம்பெருமானை அவகாஹிக்கப் பெறாதவர்களாயுள்ள நம் போன்றவர்க்கு இம்மாதிரியான அர்ச்சாவதாரமே உபஜீவ்யம். அந்த அவதாரம் த்ராவிட தேசத்தில் அநேக இடங்களில் காணப்பட்ட போதிலும் உத்தர தேசத்தில் அதிக ப்ரசாரம் பெறவில்லை. அவ்விடத்திலும் இதன் ப்ரஸித்தி பரவுவதும் அநேக பக்தர்களுக்கு இது உஜ்ஜீவந ஹேதுவாவதும் நமது ஸந்தோஷத்திற்கு முக்ய காரணங்கள்.

ஆனால், இது விஷயமாக நாம் ஆசம்ஸிக்கவேண்டிய அம்சம் ஒன்று உண்டு. நதியைக் கடப்பதற்குக் கொடுக்கப்பட்ட ஓடத்தை அதற்கு உபயோகப்படுத்தாமல் ப்ரவாஹத்தின் வழியே ஓட்டிக்கொண்டு போகும் மூடர்களைப் போல, இந்தத் தக்ஷிணதேசத்தில் பலர், ஆத்ம உஜ்ஜீவநத்திற்காக ஏற்படுத்தப்பட்ட தேவாலயங்களை அதற்கு உபயோகப்படுத்தாமல் ஆத்ம ச்ரேயஸ்ஸுக்குப் பரம சத்ருக்களாயிருக்கும் காம க்ரோதம் முதலிய பாப அபிநிவேசங்களை வ்ருத்தி செய்துகொள்ள உபயோகப் படுத்துகிறார்கள் என்பது ஸுப்ரஸித்தம். அம்மாதிரி இந்தத் தேவாலயம் எவ்வித தீங்குக்கும் ஹேதுவாகாமல் இருக்கவேண்டுமென்றும் இதன் ஸமீபத்தில் வஸிக்கும் ஜநங்கள் இதனால் ஆத்ம ச்ரேயஸ்ஸைப் பெற்று பகவத் கடாக்ஷத்திற்கும் பாத்ரமாக வேண்டுமென்றும் நாம் பகவானை ப்ரார்த்திக்கிறோம். இந்த ஸந்நிதியின் நிர்மாணத்திற்கு நிமித்தமாகப் பகவானால் அநுக்ரஹிக்கப்பட்டு, அந்த அநுக்ரஹத்தை மிகுந்த ச்ரத்தையுடனும் பக்தியுடனும் சிரஸ்ஸினால் வஹித்து கைங்கர்ய பூர்த்தியைச் செய்த பெருமாள் கோயில் ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம் அநந்தாசார்ய ஸ்வாமி விஷயத்தில் ஆஸ்திகரெல்லாரும் மிக்க நன்றியறிவு உள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

* * * *

ஸ்ரீரங்கம் லாடெரி.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் நித்ய ஆராதநங்களும் அப்பொழுதைக்கப்பொழுது நேரும் உத்ஸவம் முதலியவைகளும் நன்றாக நடைபெறும் பொருட்டு த்ரவ்ய ஸம்பாதநம் செய்ய வேண்டுமென்னும் எண்ணத்துடன், அந்த ஸ்தல வாஸிகளுள் சில ஆஸ்திகர்கள், ராஜாங்கத்தார் அநுமதியின் பேரில் 'லாடெரி சீட்டு' என்று சொல்லப்படும் ஒரு சீட்டை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம். சீட்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் லக்ஷம் சீட்டுக்களை விற்று, அதனால் சேரும் தொகையில் பாதியை ஸந்நிதி த்ரவ்யமாக வைத்துவிட்டு, பாக்கிப் பாதியை அநேக பாரிதோஷிகங்களாக விபாகம் செய்து அவைகளைச் சீட்டு வாங்கினவர்களுள் சிலருக்குக் கொடுக்கப் போகிறார்களாம். யாருக்குக் கொடுக்கப்படும் என்பது சீட்டுப் போட்டு நிர்ணயிக்கப்படுமாகையால் சிலருக்கு மாத்ரமே அவை கிடைக்கும். இம்மாதிரி சீட்டுப் போடுவதில் சில அதர்மங்கள் இருக்கின்றனவென்னும் காரணத்தால் லாடெரி போடுவதை ராஜாங்கத்தார் ஸாமாந்யமாக நிஷேதித்திருக்கிறார்கள். ப்ரக்ருதம் போன்ற விசேஷ விஷயங்களில் அவர்கள் அதற்கு அநுமதி கொடுப்பது உண்டு. அம்மாதிரி அநுமதியை இந்த ஸ்ரீரங்க வாஸிகள் ப்ரக்ருத விஷயத்தில் ராஜாங்கத்தாரிடமிருந்து பெற்றிருக்கிறார்களென்றும், உத்தேசிக்கப்பட்ட தொகையில் ஒருபாகத்தை ஏற்கெனவே

சேர்த்துவிட்டார்களென்றும், இன்னும் ஸ்வல்ப தினங்களில் பாக்கி பாகத்தையும் சேர்த்துக் கொண்டு இரண்டொரு மாஸத்திற்குள்ளாகவே பாரிதோஷிக நிர்ணயத்தைச் செய்யப்போகிறார்களென்றும் நாம் அறிகிறோம்.

இந்த ப்ரவ்ருத்தியை நாம் ஆமோதிக்கிறோமில்லை. லாடெரி என்னும் உபாயம் தர்ம விருத்தம் என்பது உண்மையானால், ஸ்ரீரங்கநாதனுக்கு அம்மாதிரி த்ரவ்ய ஸம்பாதநம் எப்படி உகப்பைத் தரும்? எந்த ராஜாங்கத்தார் லாடெரியை நிஷேதித்திருக்கிறார்களோ அவர்களே இம்மாதிரி விஷயங்களில் அநுமதியைக் கொடுக்கிறார்கள் என்னில் ராஜாங்கத்தாருடைய நிஷேத அநிஷேதங்கள் மாத்ரமே நமக்கு நிபந்தநங்களோ? நாம் செய்யும் கார்யம் தர்மமா அதர்மமா என்பதன்றோ நியாமகமாகவேண்டும்? அதர்மாம்சம் அதில் உண்டு என்பதை ஒத்துக்கொண்டால், ராஜாங்கத்தாருடைய அநிஷேதம் அதன் தோஷத்தை நிவ்ருத்தித்து விடுமோ?

உண்மையாகவே 'லாடெரி' என்பது தர்ம விருத்தமே என்பது நமது அபிப்ராயம். சாஸ்த்ரத்திற்கு அவிருத்தமாக தேஹத்தால் உழைத்தோ அல்லது புத்தியின் திறமையால் பிறருக்கு உபகரித்தோ, இம்மாதிரி ஏதாவது ஒரு மார்க்கத்தால் தமது உழைப்புக்கும் உபகாரத்திற்கும் அநுகுணமான த்ரவ்யத்தை ஸம்பாதிப்பதே ஸாதுவான ஸம்பாதநமாகும். எவ்வித பரிச்ரமமுமின்றிக்கே ஸ்வல்பத்தைக் கொடுத்து பஹுவான பலத்தை யாத்ருச்சிகமாகவும் மற்றவர்களுக்கு நஷ்டத்தை விளைவித்தும் அடைவது ஸாது ஸம்பாதநமாகமாட்டாது. நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தால், இந்த லாடெரிக்கும் சொக்கட்டான் முதலிய சூது ஆடுவதற்கும் மோசம் என்னும் அம்சத்தில் எள்ளளவும் விசேஷம் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை தவிரவும், பேராசைக்கு வசமாகாமல் இந்த லாடெரியில் எல்லாரும் ப்ரவ்ருத்திக்கிறார்களென்று யாராவது உறுதியாகச் சொல்லக்கூடுமோ? இந்தப் பேராசை,ஏழைகள் விஷயத்தில் பெரிய கஷ்டங்களுக்குக் காரணமாகாதோ? இவ்விதம் பேராசையின் வ்ருத்திக்குக்காரணமாயும் ஏழை குடும்பங்களுக்குப் பெரிய துன்பங்களை விளைவிக்கக் கூடியதுமான இம்மார்க்கத்தை யார் தான் ஸாது என்று சொல்வார்கள்? இம்மாதிரி த்ரவ்ய ஸம்பாதநத்தைச் செய்ய ப்ரவ்ருத்திக்காமல், இந்த ஆஸ்திகர்கள் ஊர் ஊராகப் போய் சக்தர்களான ஒவ்வொரு தைவ பக்தரிடமிருந்தும் யாசகம் செய்ய ப்ரவ்ருத்தித்தால் அவர்களுடைய ஆஸ்திக்யம் எல்லாராலும் எவ்வித சங்கையுமின்றிக்குப் புகழத் தகுந்ததாகவே இருக்கும்; ஸ்ரீ ரங்கநாதனுடைய திருவுள்ளத்திற்கும் அது ப்ரஹர்ஷத்தை ஜநிப்பிக்கும். இது அப்படி இருக்கமாட்டாது என்பதே நமது பீதி.

பஞ்சாங்க ஆராய்ச்சி.

இந்த ஸஞ்சிகையில் மற்றொரு பக்கத்தில் "பஞ்சாங்க ஆராய்ச்சி" என்னும் விஷத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வ்யாஸத்தை எழுதி யிருப்பவர் இந்த விஷயத்தை நன்றாகப் பராமர்சித் திருப்பவர்களுள் ஒருவரானதாலும், அவர் செய்திருக்கும் ஆக்ஷேபங்கள் நமது மதத்தின் முக்யமான அநுஷ்டாநங்களைப் பற்றி சில சங்கைகளை ஜநிப்பிக்கிற படியாலும், நமது மத அபிமாநிகளா யிருக்கும் வித்வான்க ளெல்லாரும் அவர் சொல்லி யிருக்கும் அம்சங்களை அவதாநத்துடன் ஆலோசிக்க ப்ராப்தமாகின்றது. உண்மையாகவே, அவர் சொல்லுகிறபடி ப்ரத்யக்ஷமாயுள்ள அயநாரம்ப ருது ஆரம்ப காலங்களுக்கும் பஞ்சாங்கங்களிற் சொல்லப்பட்டுள்ள அக்காலங்களுக்கும் 23 நாள் கதி வ்யத்யாஸம் இருக்கும் பக்ஷத்தில், கர்மங்களில் விச்வாஸ முள்ள நாம் இப்பொழுது செய்யும் கர்மங்க ளெல்லாம் அகாலத்தில் செய்யப் பட்டவைகளாயும் அந்தக் காரணத்தால் செய்யப் படாதவைகளுக்குத் துல்யங்களாயும் ஆகிவிடும். இப்படி இன்னும் 10000-வருஷ காலம் இந்த வ்யத்யாஸத்தை நாம் கவனியாமல் விட்டுவிட்டால், நம்மால் உத்தராயணம் என்று கொண்டாடப்படும் காலம் ப்ரத்யக்ஷத்தில் தக்ஷிணாயந காலமாகவும், தக்ஷிணாயநமாகக் கொண்டாடப்படும் காலம் ப்ரத்யக்ஷத்தில் உத்தராயண காலமாகவும் மாறிவிடுமென்றும் அவர் சொல்லுகிறார். நமது மதம் ப்ரத்யக்ஷத்திற்கு அவிருத்தமாக ப்ரவ்ருத்திக்கிறபடியால், கீழ்ச் சொல்லியிருக்கும் விபரீத அநுஷ்டாநங்கள் நேர்ந்தால் அவைகளை அது அநாதரித்தே நிற்கும். முன்காலத்தில் வராஹ மிஹிரர் என்பவர் இம்மாதிரி ப்ரத்யக்ஷத்தை அநுஸரித்து கணிதப்படி ஏற்படும் வர்ஷாரம்பம் முதலிய காலத்தை மாற்றியிருக்கிறார் என்றும் நாம் அறிகிறோம். ஆகையால், இப்பொழுது உத்தாபிதமாயிருக்கும் ஆக்ஷேபங்களில் உண்மை இருக்கும் பக்ஷத்தில், அந்த ஆக்ஷேபங்களை நிவ்ருத்தி செய்துகொள்ள நாம் ப்ரயத்நப் படுவது உசிதமாகவும் சாஸ்த்ர ஸம்மதமாகவும் இருக்கும் என்பதில் எவ்வித ஸந்தேஹமுமில்லை. அம்மாதிரி ப்ரயத்நத்தை அதற்கு அதிகாரிகளாயுள்ள நமது வித்வான்கள் உசிதமான ஊக்கத்துடன் செய்வார்களென்று நாம் நம்புகிறோம்.

சென்னை-600 005.

தேஹாதிஷ்டாத்ருதயா ப்ரதீத:, ஸ பரமாத்ம சரீரதயா பரமாத்ம ப்ரகார பூத: பரமாத்ம பர்யந்த: ப்ரயுக்தி ப்ரவ்ருத்தி நிமித்த:; அத: 'த்வம்' இதி த்வத்ப்ரகார விசிஷ்டம் த்வதந்தர்யாமிணம் ஏவாசஷ்டே இதி — "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி" இதி ப்ரஹ்மாத்மகதயைவ ஜீவஸ்ய சரீரிண: ஸ்வநாம பாக்த்வாத். "தத் த்வம்" இதி

அவனை விசேஷணமாகவும் உடைத்தாயிருக்கும் ப்ரஹ்மமே சொல்லப்படுகிறது; அதாவது அவ்விடத்தில் ஸாமாநாதிகரண்யம் ஸித்திக்கின்றது. இப்படிச் சொல்வதால் கிடைக்கும் ப்ரயோஜந மென்னவென்றால், 'த்வம்' என்னும் சப்தம் பரமாத்ம பர்யந்தம் குறிக்கின்றது என்பது ஜ்ஞாபிக்கப் படுவதுதான். அதாவது—'த்வம்' என்னும் சப்தம் தேஹத்திற்கு அதிஷ்டாதாவாக இருக்கும் ஜீவனைக் குறிக்கின்றது என்று முதலில் அறியப்பட்டது; இப்பொழுது அந்த ஜீவன் பரமாத்மாவுக்கு சரீரமாகவும் அப்படி சரீரமாக இருந்துகொண்டு அவனுக்கு விசேஷணமாகவும் அவனாலேயே தரிக்கப்பட்டவனாகவும் ஆகையால் தனித்து இருப்பதற்கும் ப்ரவ்ருத்திப்பதற்கும் தகாதவனாகவும் இருக்கிறான் என்று அறியப்படுகிறபடியால், அந்த 'த்வம்' என்னும் சப்தம், அந்த ஜீவனை விசேஷணமாக உடைய அவனுடைய அந்தர்யாமியைச் சொல்லுகின்றது. மற்றொரு சரீரத்துக்கு ஆத்மாவாக இருக்கும் இந்த ஜீவன், "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி" என்கிறபடி ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தாயிருக்கிறபடியினாலேயே பெயரை உடையவனாக ஆகிறானன்றோ?' என்று சொன்னதாயிற்று.

அந்வயிக்கும் என்பதும், "ஸ்வநாம பாக்த்வாத்" என்பது எதற்கு ஹேதுவாகின்றது என்பதும் ஏற்படவில்லை. பின்வருமாறு அந்வயம் செய்தால் மாத்ரம் அர்த்தம் ஸங்கதமாகும். "த்வம் இதி ய: ஶப்த: தேஹாதிஷ்டாத்ருதயா ப்ரதீத:, ஸ: பரமாத்ம சரீரதயா பரமாத்ம ப்ரகாரபூத: பரமாத்ம பர்யந்த: ப்ரயுக்தி ப்ரவ்ருத்தி நிமித்த:; அத:, 'த்வம்' இதி (அயம் சப்த:), "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி" இதி ப்ரஹ்மாத்மகதயைவ ஜீவஸ்ய சரீரிண: ஸ்வநாமபாக்த்வாத், த்வத்ப்ரகார விசிஷ்டம் த்வதந்தர்யாமிணம் ஏவாசஷ்டே இத்யயமர்த்த:, அவஹிதைரிதி ஜ்ஞாயதே।

'தத்' 'த்வம்' இதி—ஸ்வரூபைக்யத்தை அர்த்தமாகச் சொல்லாமல் சரீராத்ம பாவத்தை அர்த்தமாகச் சொல்லும் பக்ஷத்தில் எவ்வித தூஷணத்திற்கும் அவகாசம் இல்லாமல் இருக்கின்றது என்பதை விவரிக்கும் பொருட்டு, முதலில், 'தத்' 'த்வம்' இந்த இரண்டு பதங்களுக்கும் ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் வெவ்வேறு என்பதையும், இர

186773

ஸாமாநாதிகரண்ய ப்ரவ்ருத்தயோருபயோரபி பதயோ: ப்ரஹ்மைவ வாச்யம். தத்ர "தத்" பதம் ஜகத்காரணபூதம் ஸகல கல்யாணகுணாகரம் நிரவத்யம் நிர்விகாரம் ப்ரஹ்மாபிதத்தே; "த்வம்" இதி ச ததேவ ப்ரஹ்ம ஜீவாந்தர்யாமிரூபேண ஸஶரீர ஜீவப்ரகார விஶிஷ்டமபிதத்தே. ததேவம் ப்ரவ்ருத்தி நிமித்தபேதேந ஏகஸ்மிந் ப்ரஹ்மண்யேவ "தத் த்வம்", இதி த்வயோ: பதயோ: வ்ருத்திருக்தா. ப்ரஹ்மணோ நிரவத்யத்வம் நிர்விகாரத்வம் ஸகலகல்யாணகுணாகரத்வம் ஜகத்காரணத்வம் ச அபாதிதம்.

இப்படி ஸாமாநாதிகரண்யத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கும் 'தத்' 'த்வம்' என்னும் இரண்டு பதங்களுக்கும் ப்ரஹ்மமே பொருள். அவைகளுள் 'தத்' என்னும் பதம், ஜகத்துக்கெல்லாம் காரணமாகவும் ஸகல கல்யாணகுண கணங்களுக்கும் இருப்பிடமாகவும் எவ்வித தோஷமும் விகாரமும் அற்றிருக்கும் ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது; 'த்வம்' என்னும் பதமும் அந்த ப்ரஹ்மத்தையே, ஜீவனுக்கு அந்தர்யாமியாக இருந்துகொண்டு தனது சரீரமாயுள்ள ஜீவனுகிற விசேஷணத்துடன் கூடியிருப்பவனைக் குறிக்கின்றது. ஆகையால் 'தத்' 'த்வம்' என்னும் இரண்டு பதங்களும் வெவ்வேறு ப்ரவ்ருத்தி நிமித்தங்களை உடைத்தாயிருந்துகொண்டு ஒரே வஸ்துவாகிய ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கின்றன என்று சொல்லப்பட்டதாயிற்று. இப்படிச் சொல்வதால், ப்ரஹ்மத்தினுடைய தோஷமற்றிருக்கும் தன்மை விகாரமற்றிருக்கும் தன்மை ஸமஸ்த கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாக இருக்கும் தன்மை ஜகத்திற்குக் காரணமாக இருக்கும் தன்மை இவைகளொன்றும் பாதிக்கப்படவில்லை.

ண்டு பதங்களும் ஒரே பொருளை அவகாஹிக்கின்றன என்பதையும் விளக்கி, பிறகு அதனால் ஸாமாநாதிகரண்யம் ஸித்திக்கின்றது என்று சொல்லுகிறார். இரண்டு பதங்களும் ப்ரஹ்மத்தையே அவகாஹிக்கின்றன ; 'தத்' என்பது ஜகத் காரணமான ப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது, 'த்வம்' என்பது அந்த ப்ரஹ்மத்தையே, ஜீவனை சரீரமாயுடையவனைக் குறிக்கின்றது ; ஆகையால் ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் வெவ்வேறு ; ஆகையால் இரண்டு பதங்களுக்கும் ஸாமாநாதிகரண்ய ஸித்தி. ஸ்வரூபைக்யத்தை அர்த்தமாகக் கொண்டால், ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் வெவ்வேறாகாவாகையால் ஸாமாநாதிகரண்யம் ஸித்திக்க மாட்டாது என்பது தாத்பர்யம்.

நிரவத்யத்வம்—அப்படி ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாவிட்டால் அவித்யைக்கு ஆச்ரயமாக இருக்கும் தன்மையை ப்ரஹ்மத்துக்குக் கல்பிக்கும்படி ஸம்பவிக்கும் ; அது இதர ச்ருதிகள் முறையிடும் ஸர்வஜ்ஞத்வம் முதலியவைகளுக்கு அத்யந்தம் விருத்தம். அம்மாதிரி எவ்வித தோஷமும் தமது மதத்தில் ப்ரஸங்கியாது என்கிறார்.

அஶ்ருதவேதாந்தா: புருஷா: ஸர்வே பதார்தா: ஸர்வே ஜீவாத்மாநஶ்ச ப்ரஹ்மாத்மகா இதி ந பஶ்யந்தி; ஸர்வே ஶப்தாஶ்ச கேவலேஷு தத்தத் பதார்தேஷு வா ஏகதேஶேஷு வா அர்த்தாவஸாநம் மந்யந்தே. ஶ்ருதவேதாந்தாஸ்து வேதாந்தவாக்ய ஶ்ரவணேந ப்ரஹ்மகார்யதயா ததந்தர்யாமிதயா ச ஸர்வஸ்ய ப்ரஹ்மாத்மகத்வம் ஸர்வஶப்தாநாம்

அஶ்ருத வேதாந்தா:............ந பஶ்யந்தி—வேதாந்த சாஸ்த்ரத்தைக் கற்காதவர்கள், ஸகல பதார்த்தங்களும் ஸகல ஜீவாத்மாக்களும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையவை என்பதை அறிகிறார்களில்லை ; எல்லா சப்தங்களும் அவையவைகளின் அர்த்தங்களுள் ஏக தேசமாயுள்ள அந்தந்தப் பதார்த்தங்களைக் குறித்து அவ்விடத்திலே

அஶ்ருதவேதாந்தா இதி—'லோகத்தில் குடம் என்னும் பதத்தால் குடம் என்னும் பொருளையே க்ரஹிக்கிறேமே தவிர, குடத்திற்கும் ஆத்மாவாயுள்ள ப்ரஹ்மத்தை க்ரஹிக்கவில்லை. ஒவ்வொரு பொருளும் தன் தன் மட்டும் அர்த்தத்தைக் காண்பிக்கின்றதே தவிர ப்ரஹ்ம பர்யந்தமாக ஒரு தோற்றத்தையும் ஜநிப்பிக்கவில்லை. இவ்விதம் சப்தமொன்றும் ப்ரஹ்ம பர்யந்தம் வ்யுத்பத்தியைப் பெறவில்லையாதலாலும் ப்ரஹ்ம பர்யந்தம் தோற்றவில்லையாதலாலும் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள கல்பனை அஸங்கதம்' என்று ஒரு பூர்வ பக்ஷத்தை சங்கித்து அதற்கு ஸமாதானம் சொல்லுகிறார். ஸமாதானத்தின் ஸங்க்ரஹமாவது—'நாம் பதார்த்தங்களை ப்ரஹ்ம பர்யந்தம் க்ரஹிக்காமல் இருப்பது, பதங்களுக்கு ப்ரஹ்ம பர்யந்தம் அர்த்தம் இல்லாததால் அன்று; ஆனால் அது நம்மிடம் வேதாந்த ச்ரவணமாகிற ஸாமக்ரி இல்லாமையாலேயே. நேத்ரேந்த்ரியத்தால் சந்தனக் கட்டையின் வாஸனையை அறியாமல் இருப்பது அந்தக் கட்டைக்கு வாஸனை இல்லை என்பதைக் காட்டுமோ? வாஸனையை க்ரஹிக்கக்கூடிய இந்த்ரிய ஸாமக்ரி இல்லை என்பதை அன்றோ ஸூசிப்பிக்கின்றது? அம்மாதிரியே இவ்விடத்திலும்' என்பதுதான்.

ஸர்வே பதார்தா: ஸர்வே ஜீவாத்மாநஶ்ச—எல்லாப்பொருளின் உள்ளிலும் ஜீவாத்மா ஒன்று இருக்கிறபடியால், இவ்விடத்தில் 'எல்லா ஜீவாத்மாக்களும் ப்ரஹ்மாத்மகங்கள்' என்றால் போதும். 'எல்லாப் பதார்த்தங்களும்' என்று சேர்த்தது, அத்வாரகமாகவும் ப்ரஹ்மம் பொருள்களுக்கு ஆதாரமாக இருக்கின்றது என்னும் பக்ஷத்தை அவலம்பித்தே.

கேவலேஷு தத்தத் பதார்தேஷு—ப்ரஹ்மம் வரையில் அர்த்தம் கொள்ளாமல், கேவலம் அந்தந்தப் பொருள் வரையில் மாத்ரம் அர்த்தம் கொள்ளுகிறார்கள். இது வாச்யத்தின் ஒரு அம்சமன்றோ? ப்ரஹ்மமாகிற மற்றொரு அம்சத்தையும் கொண்டாலன்றோ வாச்யம் பூர்ணமென்று சொல்லலாம்.

தத்த்வமஸ்யாதி ஸாமாநாதிகரண்யம் ச ஜ்ஞாபயந்தி । நந்வேவம் ஸர்வ ஶப்தாநாம் தத்தத்பதார்த்தவாசிதயா வ்யுத்பத்திர் பாதிதா ஸ்யாத்; நை

யே நின்று விடுகின்றன வென்று நினைக்கிறார்கள். வேதாந்த வாக்யங்களைக் கேட்டவர்களோ வென்றால் ' ஸகல வஸ்துக்களும் ப்ரஹ்மத்தால் செய்யப்பட்டவைகள், ப்ரஹ்மத்தையே அந்தர்யாமியாக உடைத்தா யிருப்பவைகள், ஆகையால் அவைகளுக்கு ப்ரஹ்மாத்மகத்வம் உண்டு, அவைகளைச் சொல்லும் சப்தங்களெல்லாவற்றிற்கும் அந்தந்த விசேஷங்களுடன் கூடிக்கொண்டிருக்கும் ப்ரஹ்மத்தைச் சொல்லும் சக்தி உண்டு' என்பதை அறிகிறார்கள். இப்படியானால் மாடு முதலிய பதங்களுக்கு அந்தந்தப் பதார்த்தங்களைக்

ஸர்வஸ்ய ப்ரஹ்மாத்மகத்வம்—இவ்விடத்தில் 'ஸர்வஸ்ய' என்பதற்கு (ஸர்வபதார்த்தாநாம்) எல்லாப் பதார்த்தங்களுக்கும் என்பது அர்த்தம். ப்ரஹ்மம் அநுப்ரவேசித்து அந்தர்யாமியாக இருக்கிறபடியால், எல்லாப் பதார்த்தங்களுக்கும் சரீராத்மபாவத்தால் ப்ரஹ்மாத்மகத்வம். ப்ரஹ்மமே ப்ரபஞ்சத்திற்கு உபாதாந காரணமாக இருக்கிறபடியால், விசேஷணாம்சத்தில் ஸ்வரூபத்தாலேயே ப்ரஹ்மாத்மகத்வமும் கூடும் என்பது குறிப்பு.

'எல்லா சப்தங்களும் ப்ரஹ்ம பர்யந்தமே குறிக்கின்றன என்று சொன்னால், அவைகளின் வ்யுத்பத்தியும் ப்ரஹ்மம் வரையில் போகவேண்டு மன்றோ? அப்படி வ்யுத்பத்தி சொல்லாமல், லோகத்தில் ஒவ்வொரு சப்தத்திற்கும் அந்தந்தப் பொருள் வரையில் மாத்ரம் வ்யுத்பத்தி சொல்லுகிறார்களே! அது பாதித மாகாதோ?' என்னும் சங்கைக்கு "நைவம்" என்று ஸமாதாநம் சொல்லுகிறார். 'எல்லாப் பதார்த்தங்களுக்கும் ப்ரஹ்மமொன்றே வாச்யம்' என்று சொன்னாலன்றோ இந்த ஆக்ஷேபத்துக்கு இடம் உண்டு? அது நமது ஸித்தாந்தமன்று. நமது ஸித்தாந்தமென்னவென்றால் ஒவ்வொரு சப்தத்துக்கும் வாச்யத்தில் அநேக அம்சங்கள் உண்டு. ப்ரஸித்தமாக அந்தந்த சப்தத்தால் குறிக்கப்படும் பொருள் அவைகளுள் ஒரு அம்சம்; அந்தந்தப்பொருளுக்குள் நிற்கும் அததன் ஜீவன் ஒரு அம்சம், அந்தந்த ஜீவனுக்குள் அநுப்ரவேசித்து நிற்கும் ப்ரஹ்மமும் ஒரு அம்சம், என்பதுதான். "**தத்தத்ஸம்ஸ்தாந வஸ்துவேந தத்தச்சப்தா ஜீவ த்வாரா பரமாத்ம பர்யந்தஸ்ய ஸங்காதஸ்யைவ வாசகா:**" என்று கீழ்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால், ஒவ்வொரு சப்தத்துக்கும் அந்தந்த ப்ரஸித்த பொருளைச் சொல்வதான வ்யுத்பத்தி பாதிதமாகாது. ஆனால், இது ஏகதேச வ்யுத்பத்தி இந்த வ்யுத்பத்தியைக்கொண்டு வேதாந்த ச்ரவணம் செய்ய ஆரம்பித்தால், அந்த வேதாந்த ச்ரவணத்தால் வ்யுத்பத்தி பூர்ணமாகின்றது. இது தான் வஸ்து ஸ்திதி.

வம், ஸர்வே ஶப்தா அசித்ஜீவவிஶிஷ்டஸ்ய பரமாத்மநோ வாசகா இத்யுக்தம் 'நாமரூபே வ்யாகரவாணி' இத்யுக்தே: । தத்ர லௌகிகா: புருஷா: ஶப்தம் வ்யாஹரந்தோ ஶப்தவாச்யஸ்ய ப்ரதாநாம்ஶஸ்ய பரமாத்மந: ப்ரத்யக்ஷாத்யபரிச்சேத்யத்வாத் வாச்யைகதேஶே வாச்யஸமாப்திம் மந்யந்தே । வேதாந்த ஶ்ரவணேந ச வ்யுத்பத்தி: பூர்யதே । ஸர்வ

குறிக்கும் சக்தி இருப்பதாக லோகத்திற் செய்யப்படும் வ்யுத்பத்தி பாதிக்கப்பட்டதாகாதோ? என்னில், அப்படி ஆகாது; ஏனென்றால், '**நாமரூபே வ்யாகரவாணி**' என்னும் இடத்தில் ஸகல சப்தங்களும் அசேதந வஸ்துக்கள் ஜீவன்கள் இவைகளுடன் கூடிக்கொண்டிருக்கும் ப்ரஹ்மத்தையே சொல்லுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? அவைகளுள் ப்ரதாநாம்சமாகிற ப்ரஹ்மம், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களால் அறியத் தகாதாகையினால், லௌகிக மனிதரெல்லாரும் சப்தத்தை ப்ரயோகிக்கும்பொழுது, அந்த சப்தத்தால் குறிக்கப்படும் அர்த்தங்களுள் ஏகதேசமாய் (அப்ரதாநமாய்) இருக்கும் வஸ்துவினிடத்திலேயே (அசேதந வஸ்துக்கள் ஜீவன்கள் இவைகளிலேயே) அந்த சப்தம் முடிவு அடைகின்றது என்று எண்ணுகிறார்கள். வ்யுத்பத்தியின் பூர்த்தி வே

' சப்தங்களை லௌகிகங்களென்றும் வைதிகங்களென்றும் இருவகையாகப் பிரித்து, அவைகளுள் லௌகிக சப்தங்கள் எல்லாவற்றிற்கும் அந்தந்த வஸ்து வரையில் மாத்ரமும் வைதிக சப்தங்களுக்கு ப்ரஹ்மம் வரையிலும் வ்யுத்பத்தி செய்தாலோ?' என்னில், அம்மாதிரி விபாகத்திற்கு சாஸ்த்ரம் ஸம்மதியாது என்று சொல்லி, எல்லா சப்தங்களுக்கும் கீழ்ச்சொல்லப்பட்டிருப்பது போல ப்ரஹ்ம பர்யந்தம் பூர்ண வ்யுத்பத்தியை க்ரஹிப்பது தான் ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸங்கதமாகும் என்று "**வைதிகா ஏவ ஸர்வே ஶப்தா:**" என்பதாற் சொல்லுகிறார். 'எல்லா சப்தங்களும் வைதிகங்களே; வேதத்திலிருந்து எடுபடாமலுள்ள சப்தமே லோகத்தில் இல்லை' என்பது கருத்து.

ப்ரத்யக்ஷாத்யபரிச்சேத்யத்வாத்—பரமாத்மா சாஸ்த்ரமாகிற ஒரு ப்ரமாணத்தாலேயே அறியப்படுகிறவனானபடியால், ப்ரத்யக்ஷம் முதலிய ஸாமாந்ய ப்ரமாணங்களையே அவலம்பித்து நிற்கும் லௌகிகர்கள் அந்த ப்ரஹ்ம பர்யந்தமான வ்யுத்பத்தியை அறிகிறார்களில்லை.

வேதஸ்வரூபா வைதிகஶப்தா அநாதய:—வேதம் அநாதி; அதாவது வைதிக சப்தங்கள் அநாதிகள். ஒவ்வொரு ஸ்ருஷ்டி காலத்திலும் அததற்கு முன் ஸ்ருஷ்டியில் இருந்தது போலவே பதார்த்தங்களைப் பகவான் ஸ்ருஷ்டிக்கிறானென்பதும், அந்தப் பதார்த்தங்களுக்கும் முன் இருந்தது போலவே வேத சப்தங்களைக் கொண்டே

சைவ வைதிகா ஸர்வே ஶப்தா: பராத்மபர்யந்தாந் ஸ்வார்தாந் போதயந்தி । வைதிகா ஏவ ஸர்வே ஶப்தா: ; வேதாதௌ வேதாதேவோத்த்ருத்யோத்த்ருத்ய பரேணைவ ப்ரஹ்மணா ஸர்வே பதார்தா: பூர்வவத் ஸ்ருஷ்ட்வா தேஷு பதார்தேஷு பூர்வவந்நாமதயா ப்ரயுக்தா: । ததாஹ மநு:—

“ஸர்வேஷாம் து ஸ நாமாநி கர்மாணி ச ப்ருதக் ப்ருதக் ।
வேதஶப்தேப்ய ஏவாதௌ ப்ருதக் ஸம்ஸ்தாஶ்ச நிர்மமே ॥ ”

இதி । ஸம்ஸ்தா: ஸம்ஸ்தாநாநி ரூபாணீதி யாவத் । ஆஹ ச பகவாந் பராஶர:—

தாந்த சாஸ்த்ரத்தைக் கற்பதனுலேயே ஏற்படுகின்றதன்றே? இப்படியே வேதத்தில் காணப்படும் சப்தங்களெல்லாம் தங்களுடைய அர்த்தங்களைப் பரமாத்ம பர்யந்தங்களாகத் தெரிவிக்கின்றன. எல்லா சப்தங்களும் வைதிக சப்தங்களே. பர ப்ரஹ்மம், ஸகல பதார்த்தங்களையும் முன் போலவே ஸ்ருஷ்டித்த பிறகு, வேதத்திலிருந்து அந்தந்த சப்தங்களை எடுத்து, பரமாத்ம பர்யந்தமான அந்தந்தப் பதார்த்தங்களில் அவையவைகளின் பெயராக முன் போலவே வைத்தார். மநு ஸ்ம்ருதியில் அப்படியே சொல்லப்பட்டிருக்கின்றது. “பரமாத்மா முதலில் எல்லா வஸ்துக்களின் பெயர்களையும் பற்பல கர்மங்களையும் வெவ்வேறான ரூபங்களையும் வேத சப்தங்களிலிருந்தே நிர்மாணம் செய்தார்”. இவ்விடத்தில் ‘ஸம்ஸ்தா:’ என்றால் ஸம்ஸ்தாநங்களை, அதாவது ரூபங்களை என்று அர்த்தம். அப்படியே பராசர பகவானும் சொல்லியிருக்கிறார்.—“ தேவர்கள் முதலான எல்லா ப்ராணிகளுக்கும் ஸகல கர்மங்களுக்கும் பெயரையும் ரூபத்தையும் பரமாத்மா முதலில் வேத சப்

பெயர்களைக் கொடுக்கிறனென்பதும் நமது ஸித்தாந்தம்.

ததாஹ மநு:—இதற்கு ப்ரமாணம் சொல்லுகிறார். ஆதௌ—ஸ்ருஷ்டி காலத்தில், வேதஶப்தேப்ய ஏவ நாமாநி நிர்மமே—வேத சப்தங்களிலிருந்தே பெயர்களைக் கொடுத்தார். இதனால் வேதம் அநாதி என்பது மநுவின் அபிப்ராயம் என்று ஏற்படுகிறது. ப்ருதக் ஸம்ஸ்தாஶ்ச நிர்மமே என்பது அந்வயம். ஸம்ஸ்தைகளையும் அதாவது ஸம்ஸ்தாநங்களையும், அதாவது ரூபங்களையும். ஸ்ரீ பராசரரும் இம்மாதிரியே சொல்லியிருக்கிறார். ச்ருதியிலும் ப்ரமாணம் இருக்கிறது. “ யதாபூர்வமகல்பயத் ” என்பதற்கு ‘முன்போலவே ஸ்ருஷ்டித்தார்’ என்பது மாத்ரம் அர்த்தம். ஆனால் ஸூர்யன் என்றும் சந்த்ரன் என்றும் அந்த வாக்யத்திலேயே நிர்த்தேசித்திருக்கிறபடியால் ‘பெயரும் கொடுத்தார்’ என்றும் பொருளும் கிடைக்கின்றது என்று எண்ணி “ நாமாநி ச பூர்வவச்சகார ” என்று விவரித்திருக்கிறார்.

“நாம ரூபம் ச பூதாநாம் க்ருத்யாநாம் ச ப்ரபஞ்சநம் ।
வேதஶப்தேப்ய ஏவாதௌ தேவாதீநாம் சகார ஸ: ॥ ”

இதி । ஶ்ருதிஶ்ச—

“ ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத் ॥ ”

இதி । ஸூர்யாதீந் பூர்வவத் பரிகல்ப்ய நாமாநி ச பூர்வவச்சகாரேத்யர்த: ।

ஏவம் ஜகத்ப்ரஹ்மணோரநந்யத்வம் ப்ரபஞ்சிதம்; தேநைகேந ஜ்ஞாதேந ஸர்வஸ்ய ஜ்ஞாததா உபபாதிதா । பவதி ஸர்வஸ்ய ப்ரஹ்மகார்யத்வ ப்ரதிபாதநேந ததாத்மகதயைவ ஸத்யத்வம் நாந்யதா இதி

தங்களிலிருந்தே ப்ரபஞ்சித்தார் ”. ச்ருதியிலும் “ பரமாத்மா, ஸூர்யன் சந்த்ரன் இவர்களை முன்போலவே ஸ்ருஷ்டித்தார் ” என்று சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது: “பரமாத்மா, ஸூர்யன் முதலியவைகளை முன் போலவே ஸ்ருஷ்டித்து பெயர்களையும் முன்போலவே செய்தார் ” என்று சொன்னதாயிற்று.

இவ்வாறு ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்குமுள்ள அபேதம் உபபாதிக்கப்பட்டது. இதனால் ஒன்றை அறிந்தால் மற்றவையெல்லாம் அறியப்பட்டவையாகிவிடும் என்பதும் உபபாதிக்கப்பட்டதாயிற்று. எல்லாம் ப்ரஹ்மத்தின் கார்யம் என்பது ப்ரதிபாதிக்கப்பட்டால், எல்லாம் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையவை என்பது சொன்னதாகிறது; அப்படி எல்லாம் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தாயிருந்தால் மாத்ரம் எல்லாவற்றிற்கும்

ஏவம்—ப்ரக்ருதத்தின் நிகமநம். ‘ப்ரஹ்மமும் ஜகத்தும் வெவ்வேறல்ல; ஆகையால் ஒன்றை அறிந்தால் மற்றொன்றும் அறியப்பட்டதாகும் (ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்)’ என்பதன்றே முதலில் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது? அது உபபாதநம் செய்யப்பட்டது என்று முடிக்கப்படுகின்றது.

ஸர்வஸ்ய ப்ரஹ்மகார்யத்வ ப்ரதிபாதநேந—“ தத் ஸத்யம் ”, என்னும் வாக்யத்திற்கு ஒரு விசேஷார்த்தம் சொல்லுகிறார். ‘இப்பொழுது உபபாதித்திருக்கிறபடி ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்ம கார்யமாக இருந்துகொண்டு அதனாலேயே ப்ரஹ்மாத்மகமாக இருக்கிறபடியால், ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தைப் போல ஸத்யம் என்றே சொல்லவேண்டும்; ப்ரபஞ்சத்தை ஸத்யம் என்று சொல்வதும் இந்தக் காரணத்தாலேயே, மற்ற எவ்வித காரணத்தாலுமன்று’ என்பதுதான் அதன் பொருள். அதாவது—தத் ஸத்யம் என்பதற்கு ஜகத் ஸத்யம் என்று பொருள் என்று சொன்னதாயிற்று.

“ தத் ஸத்யம் ” இத்யுக்தம், யதா த்ருஷ்டாந்தே ஸர்வஸ்ய ம்ருத்விகாரஸ்ய ம்ருதாத்மநைவ ஸத்யத்வம் ॥

ஸத்யமாக இருக்கும் தன்மை ஏற்படுமன்றோ? இதுதான் “ தத் ஸத்யம் ” என்பதன் அர்த்தம். த்ருஷ்டாந்தத்திலும்,மண்ணின் விகாரமாகிற குடம் முதலிய எல்லாப் பொருள்களுக்கும் அவைகள் மண்ணை ஆத்மாவாக (ஸ்வரூபமாக) உடைத்தா யிருப்பதனாலேயே ஸத்யத்வம் ஏற்படுகின்றது.

யதா த்ருஷ்டாந்தே—தார்ஷ்டாந்திகமெல்லாம் த்ருஷ்டாந்தத்திற்கு அநுகுணமாக இருக்கவேண்டுமன்றோ? இவ்விடத்தில் ‘மண்’ ‘குடம்’ இவைகளை த்ருஷ்டாந்தமாகச் சொல்லி இருக்கிறபடியால், ‘தத் ஸத்யம்’ என்பதற்கு, த்ருஷ்டாந்தத்தில் குடம் முதலியவை ஸத்யமாக இருக்கவேண்டும் என்பது கருத்து.

இவ்வாறு ஸத் வித்யைக்கு ஸவிசேஷ பரத்வம் நிரூபிக்கப்பட்டது. இந்த நிரூபணத்தைச் சற்று கவனிப்போம். “ தத் த்வமஸி ” என்னும் வாக்யத்திற்கு ‘ நீ அதுதான் ’ என்பது அர்த்தம் ; அதாவது—‘ இரண்டும் ஒன்றே’ என்று சொன்னதாயிற்று. எப்படி ஒன்று என்னில், ப்ரஹ்மம் நிர்விசேஷமானதால் ஸ்வரூபத்தாலேயே இரண்டு மொன்று என்று சொல்வது அஸங்கதம் என்பது ஸ்ரீ பாஷ்யகாருடைய நிரூபணம். நிர்விசேஷத் தன்மையை ஒத்துக்கொண்டு ஸ்வரூப ஐக்யம் சொல்லும் பக்ஷத்தில், “ தத் ” “ த்வம் ” என்னும் பதங்களுக்கு வெவ்வேறு ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் ஸம்பவிக்கமாட்டாவாதலால் ஸாமாநாதிகரண்யமே ஸித்திக்காது என்பது ஒரு அஸாங்கத்யம். மற்றொரு அஸாங்கத்யம் என்ன வென்றால்—உபக்ரமத்தில் நிமித்தகாரணமாயிருக்கும் தன்மை உபாதாநகாரணமா யிருக்கும் தன்மை அந்தத் தன்மைகளுக்கு உபயோகியாக இருக்கும் ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்கள் இவைகளெல்லாவற்றையும் ப்ரஹ்மத்துக்கு ப்ரதிபாதிக்கும் வாக்யங்கள் இருக்கிறபடியால், இந்த வாக்யத்திலுள்ள ‘தத்’ என்னும் சப்தம் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தையே பராமர்சிக்கவேண்டும்; அப்படிப் பராமர்சித்தால் ப்ரஹ்மம் ஸவிசேஷமாகுமே தவிர நிர்விசேஷமாகாது என்பதுதான். தவிரவும் ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களுக்கு விருத்தமாயுள்ள அவித்யாச்ரயத்வம் கல்பிக்கும்படியும் ப்ரஸங்கிக்கும். ஆகையால், ப்ரஹ்மம் நிர்விசேஷமென்று சொல்லி இந்த வாக்யத்துக்கு ஸ்வரூப ஐக்யத்தைப் பொருளாகச் சொல்வது ஸாத்யமில்லை என்று சொன்னதாயிற்று. ஆனால் வேறு எப்படி ஐக்யம் சொல்லலாம் என்னில், ப்ரஹ்மம் ஸவிசேஷம் என்பதை அங்கீகரித்து, ‘த்வம் தத்’ என்னும் பதங்கள் இரண்டும் ப்ரஹ்மத்தையே அவகாஹிக்கின்றன வென்றும், ஆனால்

அதஸ்ச யஸ்யா பவநம் புஜாந்தரம்
தவ ப்ரியம் தாம யதீயஜந்மபூ: ।

ரதாங்க—இந்த ஆபரணங்களோடு விகல்பிக்கலாம்படி சோபாவஹமான திவ்யாயுதங்களின் சேர்க்கையை அநுபவிக்கிறார்.

லஸத்துலஸ்யா வநமாலயோஜ்ஜ்வலம்:—ஸர்வைச்வர்ய ஸூசகமாய் திருவடிகள் அளவும் தாழ்ந்து “அல்லித் துழாயலங்கல்” என்கிற வநமாலையாலே விளங்காநின்ற உன்னை. ஆபரணாயுதாதிகள் தன்னைப் பற்றி விளங்குகையும் அவற்றாலே தான் விளங்குகையுமாகச் சொல்லுகிறபடி. “ ஸ்வமஹார்ஹேண யதுக்தம் ஸாந்நித்யேவ ரராஜ வைபவை: । திஷ்டயே ஸ்வவ்யாகாரேஷு ஸ்வதந்த்ர்யா விராஜிதை: ॥ ”

(37) அதஸ்சேதி—மேல் இச்லோக த்வயத்தாலே பிராட்டியோட்டைச் சேர்த்தியை அநுபவிக்கிறார். இதில், முதல் ச்லோகத்தாலே பிராட்டியுடைய மேன்மையையும், இவள் பக்கல் ஈச்வரனுக்கு உண்டான வ்யாமோஹத்தையும் அருளிச்செய்கிறார்.

தவ புஜாந்தரம் யஸ்யா பவநம் அதஸ்ச—“ ஸர்வ யஜ்ஞமயம் வபு:” என்கிற திருமார்பைப்பிராட்டிக்குக் கோயிற் கட்டணமாகப் பண்ணியருளிற்று.

யஸ்யா:—என்கிறது இதில் உண்டான ப்ரமாண ப்ரஸித்தியாலே “ஸர்வயஜ்ஞமயம் வபுரத்யாஸ்தே,” “பஸ்யந்தாம் ஸர்வ தேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:”, “நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கை,” “திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார்”, “என் திருமகள் சேர்மார்பன்”, “மைய கண்ணாள் மலர்மேலுறைவாளுறை மார்பினன்”, “அலர்மேல் மங்கையுறை மார்பா”, “மார்வத்துமாலை”, “செய்யாள் திருமார்பினில் சேர்திருமால்”.

ப்ரியம் தாம யதீயஜந்மபூ:—யாவளொருத்தி அவதரித்த திருப்பாற் கடல் அயர்வறும் அமரர்கள் அதிபதியான தேவருக்கு இனிதமரும் இடமாயிற்று. “ஸ்ரீ: பத்மவநாலயா” “ தேவதாநவயத்நேந ப்ரோத்பூதாம்ருதமந்தநே ”, “ ததாநீம் க்ஷீரோதே ஸீதே ஸ்ரீமத்ஸஹஸ்ரசீர்ஷே விரோசதே ”

𑌜𑌗𑌤𑍍 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌯𑌦𑌪𑌾𑌙𑍍𑌗𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌂
𑌯𑌦𑌰𑍍𑌥𑌮𑌮𑍍𑌭𑍋𑌧𑌿𑌰𑌮𑌨𑍍𑌥𑍍𑌯𑌬𑌨𑍍𑌧𑌿 𑌚 ॥ 37
𑌸𑍍𑌵𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍍𑌯𑍇𑌣 𑌸𑌦𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌯𑌾𑌽𑌪𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑌾𑌦𑌧𑌾𑌨𑌯𑌾 ।

𑌜𑌗𑌤𑍍𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌯𑌦𑌪𑌾𑌙𑍍𑌗𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌂 — “𑌅𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌾 𑌜𑌗𑌤𑌃”, “𑌈𑌶𑍍𑌵𑌰𑍀𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂”, “𑌈𑌶𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂” என்கிறபடியே இவ்வுபய விபூதியும் இவள் ஒருத்தியுடைய மந்த கடாக்ஷத்தைப் பற்றி உண்டாயிருக்கிறது.

𑌯𑌦𑌰𑍍𑌥𑌮𑌮𑍍𑌭𑍋𑌧𑌿𑌰𑌮𑌨𑍍𑌥𑍍𑌯𑌿 — “விண்ணவரமுதுணவமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமான்” என்கிறபடியே யாவளொருத்தியைப் பெறுகைக்குக் கடல் கடைந்தருளிற்று.

𑌅𑌬𑌨𑍍𑌧𑌿 𑌚 — யாவளொருத்தி யுடைய பிரிவாற்றாமையாலே கடலை யடைத்தருளிற்று. “𑌏𑌷 𑌸𑍇𑌤𑍁𑌰𑍍𑌮𑌯𑌾 𑌬𑌦𑍍𑌧𑌃 𑌸𑌾𑌗𑌰𑍇 𑌸𑌲𑌿𑌲𑌾𑌰𑍍𑌣𑌵𑍇 । 𑌤𑌵 𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌿 𑌨𑌲𑌸𑍇𑌤𑍁𑌃 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌃 ॥”

(38) 𑌸𑍍𑌵𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍍𑌯𑍇𑌣 — இதில் பிராட்டியினுடைய நிரதிசய போக்யதையையும், “உனக் கேற்கும் கோலமலர்ப் பாவை’ என்கிறபடியே அவனுக்கேயாயிருக்கிற இருப்பையும் அநுபவிக்கிறார்.

𑌸𑍍𑌵𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍍𑌯𑍇𑌣 𑌸𑌦𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌯𑌾𑌽𑌪𑌿 — ஸர்வசக்தியான தேவர் ஸர்வவிக்ரஹத்தாலும் ஸர்வ காலமும் ஸர்வ ப்ரகாரத்தாலும் அநுபவியா நின்றாலும், பிராட்டியினுடைய போக்யதையைப் பரிச்சேதிக்கப்போகாது. ஸௌபரியைப்போலே அநேக விக்ரஹத்தைப் பரிக்ரஹித்தாலும் முடியாது. ‘𑌵𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌷𑍁’ என்கிறபடியே ப்ரகாரங்கள் அநேகமானாலும் முடியாது.

𑌅𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑌾𑌦𑌧𑌾𑌨𑌯𑌾 — நித்யாபூர்வம் போலே ஆச்சர்யாவஹமாய் இருக்கும். “𑌸 𑌏𑌕𑌧𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑌤𑌿” என்று நித்ய ஸூரிகள் தன் திறத்தில் படுமதெல்லாம் பிராட்டியைக் குறித்துத் தான் படுமென்கை. “பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூறல்” என்றும், “அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதம்” என்றும் ஆழ்வார்களும், “𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿” என்று நித்யஸூரிகளும் நித்யாபூர்வதையாலே தேவர் திறத்தில்

𑌗𑍁𑌣𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌿𑌲𑌾𑌸𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃
𑌸𑌦𑌾 𑌤𑌵𑍈𑌵𑍋𑌚𑌿𑌤𑌯𑌾 𑌤𑌵 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ॥ 38
𑌤𑌯𑌾 𑌸𑌹𑌾𑌸𑍀𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌭𑍋𑌗𑌿𑌨𑌿
𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑍈𑌕𑌧𑌾𑌮𑌨𑌿 ।

படுமதெல்லாம் தேவர் படும்படியாயிறே பிராட்டி போக்யதை இருப்பது.

உகப்பிப்பது எவ்வழியாலே என்னில்,

𑌗𑍁𑌣𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌿𑌲𑌾𑌸𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃 — வடிவழகாலும் சீலாதி குணங்களாலும் “𑌸𑌕𑌲𑌸𑍍𑌵𑌾𑌕𑌾𑌰𑌵𑌿𑌨𑍋𑌦𑌨𑌾𑌶𑌯𑌾” என்கிறபடியேயும், “ஈர்கின்ற குணங்களையுடையாய்” என்கிற குணங்களையும் “உன்செய்கை நைவிக்கும்” என்கிற சேஷ்டிதங்களிலும் அபியுக்தர் ஆழங்கால்படும்படி இருக்குமிறே அவன். இப்படி இவள் ஸ்வரூபாதிகளிலே அழுந்துகிறான். அவன் ஸ்வரூபத்தாலே அபரிச்சிந்நன்; இவள் போக்யதையாலே அபரிச்சிந்நை.

𑌸𑌦𑌾 𑌤𑌵𑍈𑌵𑍋𑌚𑌿𑌤𑌯𑌾 — “𑌤𑍁𑌲𑍍𑌯𑌶𑍀𑌲𑌵𑌯𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌂” என்றும், “உனக்கேற்கும்கோல மலர்ப் பாவை” என்றும் சொல்லுகிறபடியே தேவர் தமக்குத் தகுதியா யிருக்குமவள்.

𑌸𑌦𑌾 — என்று 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑌿𑌭𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 உண்டான ஸர்வாவஸ்தைகளிலும் என்கிறது. ‘𑌗𑍁𑌣𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌿𑌲𑌾𑌸𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃 𑌸𑌦𑌾 𑌤𑌵𑍈𑌵𑍋𑌚𑌿𑌤𑌯𑌾’ என்னவுமாம்.

𑌤𑌵𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 — “𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃” என்றும், “உன் திரு” என்றும் சொல்லுகிறபடியே அநந்யார்ஹை என்னுதல், தேவர்க்கு ஸம்பத்தா யிருக்கும் என்னுதல்.

(39) 𑌤𑌯𑌾 𑌸𑌹 — இதில் பர்யங்க வித்யையில் சொல்லுகிறபடியே, திருவநந்தாழ்வான் மடியிலே பிராட்டியோடே எழுந்தருளியிருக்கிற சேர்த்தியை அநுபவிக்கிறார்.

𑌤𑌯𑌾 𑌸𑌹𑌾𑌸𑍀𑌨𑌂 — “𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌰𑌾𑌸𑍍𑌤𑍇” என்கிறபடியே நித்யவிபூதியில் மிதுநமாய் இருந்திறே அடிமை கொள்வது. அவதாரத்திலும் “𑌭𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌸𑌹 𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾” என்னக்கடவதிறே.

𑌅𑌨𑌨𑍍𑌤𑌭𑍋𑌗𑌿𑌨𑌿 — ஸ்ரிய:பதித்வத்தால் வந்த உத்கர்ஷத்தோபாதியிறே இவனோட்டைச் சேர்த்தியும். “[illegible] । 𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑍋𑌽𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥” என்கிறபடியே குணாநந்த்யத்தாலே அநந்தன் என்னக்கடவதிறே. ஈச்வரன்

ஃபணாமணி வ்ராத மயூக மண்டல
ப்ரகாஶமாநோதர திவ்யதாமநி ॥ 39
நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோ
பதாந வர்ஷாதப வாரணாதிபி: ।

ரக்ஷணத்திலே அஸங்க்யாத குணன்; இவன் கைங்கர்யார்த்தமாக அஸங்க்யாத குணன்.

போகிநி—மென்மை குளிர்ச்சி நாற்றம் இவற்றை ஸ்வபாவமாக உடைய திருமேனியிலே. போகம்—சரீரம்.

ப்ரக்ருஷ்டவிஜ்ஞாந பலைகதாமநி-இருவருமாய்ப் பரிமாறும்போது அவர்களுக்கும் படியான ஜ்ஞாந சக்த்யாதிகளுக்கு ஆச்ரயமாய் இருக்குமவன். ஒருத்தனென்று அவனுக்குக் கூசவேண்டாதே துகைத்துப் பரிமாறலாம்படியான தாரண ஸாமர்த்யத்துக்கு ஆச்ரயமாயிருக்குமவன்.

ஃபணாமணீத்யாதி—தன்னுடைய பணாமணி ஸமூஹங்களினுடைய ரச்மி மண்டலங்களினாலே ப்ரகாசியாநின்ற மத்யத்தையுடைய திவ்யாந்த:புரத்தை உடையவன். "மணிவிளக்காம்" என்கிறபடியே திவ்யாந்த: புரத்துக்கு மங்கள தீபமாயிறே இருப்பது.

(40) நிவாஸ—திருவநந்தாழ்வானுடைய வ்ருத்தி விசேஷங்களை அநுபவிக்கிறார். தமக்கு அடிமையில் உண்டான த்வரையாலே, "உசிதம் ஶேஷாணாம் ஸாயுஜ்யம்" என்னும் ந்யாயத்தாலே அடிமையில் ருசியுடையார்க்கெல்லாம் உதாஹரண பூதமாயிறே திருவநந்தாழ்வானுடைய காஷ்டையை அருளிச்செய்கிறார்.

நிவாஸ—எழுந்தருளியிருக்கிற திருமாளிகையாம்.
ஶய்யா—கண்வளர்ந்தருளுகைக்குப் படுக்கையாம்.
ஆஸந—'இருந்தால் சிங்காசனமாம்.'
பாதுகா—'நின்றால் மரவடியாம்.'
அம்ஶுக—பும்ஸ்த்வாவஹமான திருப்பரியட்டமாம்.
உபதாந—'புல்கு மணையாம்.'
வர்ஷாதபவாரணாதிபி:—"சென்றால் குடையாம்" என்கிறபடியே வர்ஷத்துக்கும் ஆதபத்துக்கும் சத்ரமாம்.

ஶரீரபேதைஸ் தவ ஶேஷதாம் கதை
யதோசிதம் ஶேஷ இதீர்யதே ஜநை: ॥ 40
தாஸ: ஸகா வாஹநமாஸநம் த்வஜோ
யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய: ।

ஶரீரபேதை:—கைங்கர்ய பேதமே சரீர பேதத்துக்கு ஹேது.

தவ ஶேஷதாம் கதை:—தேவருடைய விக்ரஹங்கள் ரக்ஷணஹேதுவாய் இருக்கிறாப்போலே, இவனுடைய விக்ரஹங்கள் சேஷத்வத்தை அடைந்திருக்குமென்கை.

யதோசிதம்—"யதா யதா ஹி கௌஸல்யா" என்கிறபடியே தத்தத் காலோசிதமாய் இருக்கை.

ஜநை: ஶேஷ இதீர்யதே—சிறியார் பெரியார் என்னாதே ஸர்வராலும் சேஷனென்று சொல்லப்படுகை. சேஷத்வம் தான் ஒரு வடிவு கொண்டாற்போலே இருக்கை.

ஜநை:—"பெருமக்களுள்ளவர்" என்கிறபடியே நித்யஸூரிகளைச் சொல்லவுமாம்.
ஶேஷ இதி—ஸர்வமதாதிஶயா யாநேஷு யோவாதேயகலேவ யஸ்த்து ஸர்வம் ஸ ஶேஷ:, ஸ ஶ்லாகீ என்கிற சேஷத்வத்தின்படியே பாரதந்த்ர்யம், ஸர்வே ஸர்வம்ஶீ தஸ்யாதி.

(41) தாஸ ஸகேதி—இதில் வாஹநத்வ ஜாதி ஸர்வ வ்ருத்திகளுமுடையனாய், ஈச்வரனுக்கு மோம்பழம் போலே ஸதா விரும்பும்படி அபிமதராயிருக்கிற பெரிய திருவடியோட்டைச் சேர்த்தியை அநுபவிக்கிறார்.

தாஸ:—தன்னுடைய வ்யாபாரங்களடங்க ஈச்வரனுக்கு அதிசயத்தை விளைக்குமவையாயிருக்கும்.

ஸகா—ஜகத் வ்யாபாரங்களில் ஈச்வரன் தன்னோடே உசாவவேண்டும்படியான பெருமையையுடையவன்.

வாஹநம்—ஆச்ரிதருடைய ஆபத்துக்களிலே ஈச்வரனைக் கொண்டுவந்து சேர்க்குமவனாயிருக்கை.

ஆஸநம்—ஒரு கார்யமில்லாதபோது ஸிம்ஹாஸநஸ்தனாய் இருந்தாலோபாதி தன் மேன்மைக்கு ஸத்ருசமென்னும்படி ஸிம்ஹாஸநமாயிருக்கை.

உபஸ்திதம் தேந புரோ கருத்மதா
த்வதங்க்ரி ஸம்மர்த கிணாங்க ஶோபிநா ॥ 41
த்வதீய புக்தோஜ்ஜித ஶேஷ போஜிநா
த்வயா நிஸ்ருஷ்டாத்ம பரேண யத்யதா ।

த்வஜம் — ஈச்வரன் கிட்டுவதற்கு முன்னே எழுந்தருளி நின்றானென்று ஆச்ரிதர்க்கு ப்ரீதிஹேதுவான கொடியானவன். அவனுடைய ரக்ஷகத்வத்துக்கு ஹேதுவானவன் என்னுமாம். “பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போல்” என்றும், “புள்ளூர் கொடியாய்” என்றும் உண்டான ப்ரஸித்தியைச் சொல்லுகிறது.

விதாநம் — “விநதை சிறுவன் சிறகென்னும், மேலாப்பின்கீழ் வருவான்” என்கிறபடியால் ஆதப நிவாரணமா யிருக்கை. “ பக்ஷம் [illegible] ॥ ” இதி [illegible]

வாஹநம் — தன்னை மேற்கொண்டு போம்போது சாமரங்கள்போலே திருச்சிறகாலே ஆச்வாஸகனா யிருக்கை.

த்ரயீமய: — த்ரிவ்ருத் சிரோ, காயத்ரம் சக்ஷு:” என்கிறபடியே வேதங்களை அவயவங்களாக உடையனா யிருக்கை. அவயவாபேக்ஷயா. ஈச்வரன் வேதப்ரதிபாத்யன் ; இவன் வேதசரீரன்.

தேந புரோ கருத்மதா உபஸ்திதம் — ஸர்வேச்வரன் தன்னைப்ரகாசிப்பிக்கும் நிலைக்கண்ணாடி போலேயும் மோம்மழம் போலேயும் திருமுன்பே ஸர்வதா ஸந்நிஹிதமா யுள்ளவன்.

த்வதங்க்ரி ஸம்மர்த கிணாங்க ஶோபிநா — தன்னை மேற்கொண்டால் திருவடிகளாலே நெருக்கின தழும்பு, தனக்கு போக சிஹ்நமாகையாலே அத்தாலே விளங்காநிற்குமவன். ஈச்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபம் லக்ஷணமானால் போலே, இவனுக்கும் அது தாஸ்ய சிஹ்நமாயிருக்கும்.

(42) த்வதீய — உபய விபூதி விஷயமான தன்னுடைய ஸர்வ பரத்தையும் இவன் பக்கலிலே வைத்து, இவனிட்ட வழக்கா யிருக்கிற ஸ்ரீ ஸேநாபதி ஆழ்வானுடைய தாஸ்ய ஸாம்ராஜ்யத்தை அநுபவிக்கிறார்.

ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத்
ததாநுஜாநந்தம் உதார வீக்ஷணை: ॥ 42

த்வதீய புக்தோஜ்ஜித — தேவர் அமுதுசெய்து கைவாங்கின ப்ரஸாதத்தாலே தரிக்குமவரா யிருக்கை. ‘த்வதீய’ என்கையாலே வகுத்த ஸ்வாமியுடைய சேஷமே போஜ்யமென்கிறது. “யஜ்ஞஶிஷ்ட போஜ்யம்” என்கையாலே அல்லாதாருடைய உச்சிஷ்டம் அபோஜ்ய மென்கை. “புக்தோஜ்ஜிதம்” என்கையாலே “கலத்ததுண்டு” என்கிறபடியே அமுதுசெய்து கைவாங்கின பின்புற்றையதே போஜ்யம்; முன்பு பாத்ரசேஷமே அபோஜ்யமென்கிறது.

ஶேஷபோஜிநா — தனக்குத் தாரகமா யிருக்குமளவன்றிக்கே “ஸ்வாது ஹத்வா ஜிஹ்வாயாம்”—என்கிறபடியே, ஈச்வரனுக்கு போக்யமாவது மாழ்வாரமுது செய்தா லென்கை.

த்வயா நிஸ்ருஷ்டாத்ம பரேண — நம்மிலும் பெரியவன், ஸமர்த்தன் என்று தேவராலே தன் பக்கலிலே வைக்கப்பட்ட உபய விபூதி ரூபமான பரத்தை உடையவனாலே.

ப்ரியேண — ஸர்வாபிமத னானவனாலே.

ஸேநாபதிநா — ஸர்வ லோக நிர்வாஹகனாலே. “அசைவில் அமரர் தலைவர் தலைவா” என்னக்கடவதிறே.

யத்யதா ந்யவேதி — யாதொரு கார்யம் யாதொருபடி விண்ணப்பம் செய்யப்பட்டது. இதிலுண்மானம் புறமானம் பார்ப்பதில்லை; செய்யும் ப்ரகாரங்களும் அநுஸந்திப்பது மில்லை; ஈச்வரன் இவன் உக்தியைப் பின்செல்லுமத்தனை.

உதாரவீக்ஷணை: தத் ததாநுஜாநந்தம் — “ [illegible] ”—என்றும், “உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணன்” என்றும் சொல்லுகிறபடியே [illegible] மான இக்கடாக்ஷங்களாலே ஆயிற்று இவனிப்படிச் செய்வதென்று நினைப்பிடுவது.

ஹதாகில க்லேஶமலை: ஸ்வபாவத
ஸ்த்வதாநுகூல்யைகரஸைஸ்தவோசிதை: ।
க்ருஹீத தத்தத்பரிசார ஸாதநை
ர்நிஷேவ்யமாணம் ஸசிவைர் யதோசிதம் ॥ 43

---

(43) ஹதாகிலேத்யாதி—"ஸதா பஶ்யந்தி ஸூரய:" இத்யாதிகளில் சொல்லுகிற நித்யஸூரிகளுடைய தாஸ்யைக ஸம்ருத்தியை அநுபவிக்கிறார். "அடியார்கள் குழாங்களை யுடன்கூடுவ தென்று கொலோ" என்றிறே இவர் ப்ரார்த்தனை.

ஹதாகில க்லேஶமலை:—அவித்யாஸ்மிதா ராக த்வேஷாபிநிவேசா: பஞ்ச க்லேசா: என்கிறவை க்லேசங்கள்; அவற்றினுடைய ப்ராகபாவத்தை உடையவர்களென்கை. இத்தால் பத்த வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. 'மல' மென்று ப்ரக்ருதியாய், தத்ஸம்பந்தஜநிதயா வந்த ப்ராகபாவத்தை உடையவர்களென்கை. இத்தால் ப்ரபுத்த ஸ்வபாவ யுக்தரான முக்த வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது.

ஸ்வபாவதஸ்த்வதாநுகூல்யைகரஸை:—ஸத்தா ப்ரயுக்தமான தேவர் திருவடிகளில் கைங்கர்யத்தையே போக்யமாக உடையரா யிருக்கை. இத்தாலும் ஒருநாள் தொடங்கி அடிமை செய்யத் தொடங்கின முக்த வ்யாவ்ருத்தியைச்சொல்லுகிறது.

தவோசிதை:—ஸ்வரூப ரூப குணங்களாலே தேவருக்கு ஸத்ருச லக்ஷணரானவர்கள்.

க்ருஹீதேத்யாதி—கைங்கர்யோசித பரிகரங்களை ஆதராதிசயத்தாலே விடமாட்டாமையாலே "சூட்டு நன்மாலை" ப்படியே தரித்திருக்கையாலே தேவர்க்கே ஸத்ருசரானவர்களாலே ஸேவிக்கப்படாநின்றுள்ள உன்னை.

ஸசிவை:—வாத்ஸல்யத்தாலே அவன் முறையழியப் பறிமாற நினைத்தாலும், அவனை முறையுணர்த்தி அடிமை செய்யுமவர்கள் நீதிவானவரிறே. ஆச்ரித ரக்ஷணத்தில் தேவரை ப்ரேரிக்குமவர்களிறே.

யதோசிதம்— ஸ்வரூபாநுரூபமாக என்னுதல், அவஸரோசிதமாக என்னுதல்.

ஸ்ரீ:

சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபை

சந்தா வரவு.

1927- வருஷம் எப்ரல் 21வ முதல் ஜூன் 6வ வரையில்,

ஸ்ரீ. உ. வே.	என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்	3	0	0
,,	வி. எஸ் பாரத்தசாரதி அய்யங்கார்	3	0	0
,,	ராமகிருஷ்ண சடகோப தாஸர்	4	0	0
,,	வி. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், வாலாஜாபாத்	3	0	0
,,	கெ. நரஸிம்மா சாரியார், சைதாப்பேட்டை	3	0	0
,,	ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி	3	0	0
,,	எ. குப்புஸாமி அய்யங்கார், சேப்பாக்கம்	3	0	0
,,	என். வி. கே. ஸ்ரீநிவாஸாசாரியார், பார்க்டவுன்	3	0	0
,,	ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சிந்தாதிரிப்பேட்டை	3	0	0
,,	யு. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி	3	0	0
,,	எஸ். சுப்பராயலு அய்யர், நந்தியால்	3	0	0
,,	அடயார் புஸ்தகசாலை, அடையார்	3	0	0
,,	டி. கே. நாராயண அய்யங்கார், கீழ்ப்பாக்கம்	3	0	0
,,	ஆர். லக்ஷ்மண அய்யங்கார், திருவல்லிக்கேணி	3	0	0
,,	எ. திருவேங்கடா சாரியார், புரசவாக்கம்	3	0	0
,,	வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், செங்கல்பட்டு	3	0	0
,,	என். ரகுநாதஸ்வாமி அய்யங்கார், திண்டிவனம்	3	0	0
,,	வி. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், கும்பகோணம்	3	0	0
,,	பிரம்மபுரம் பொன்னுரங்க ராமாநுஜ தாஸர், மாரிகுப்பம்	3	0	0
,,	பின்னை வானமாமலை ராமாநுஜதாஸர், மாரிகுப்பம்	3	0	0
,,	ஆர். ஸ்ரீநிவாஸாசாரியார், புதுக்கோட்டை	3	0	0
,,	பி. எஸ். சக்ரவர்த்தியா சாரியார், ஆலங்குடி	2	0	0
,,	எஸ். என். சடகோபா சாரியார், தங்கசாலைத் தெரு	1	0	0
,,	ராஜமன்னார் செட்டியார், ஜியார்ஜ்டவுன்	5	0	0
,,	வி. ராஜகோபாலாசாரியார் ,,	5	0	0
,,	சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசாரியர், கும்பகோணம்	5	0	0
,,	திவான்பகதூர், டி. ரங்காசாரியர், வேப்பேரி	5	0	0
,,	கே. என். நரசிம்மாசாரியர், வேப்பேரி	5	0	0
,,	டி. டி. சம்பத் குமாராசாரியர், சேலம்	3	0	0
,,	எஸ். ராமஸ்வாமி அய்யங்கார், மைலாப்பூர்	3	0	0
,,	வி. எஸ். கோபாலாச்சாரியார், மைலாப்பூர்	3	0	0
,,	பி. எ. ஸ்ரீநிவாஸாசாரியார், திருவல்லிக்கேணி	3	0	0
,,	பி. டி. சேஷாத்ரியாசாரியார், திருப்பத்தூர்	3	0	0
,,	கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் மைலாப்பூர்	3	0	0
,,	எம். துரைஸாமி அய்யங்கார், ஜியார்ஜ்டவுன்	3	0	0
,,	கீழ்வீதி ராகவாச்சாரியர், ஜியார்ஜ்டவுன்	3	0	0
,,	கெ. என். ராமாநுஜாசாரியர், மாம்பலம்	3	0	0
,,	எஸ். ராமஸ்வாமி அய்யங்கார், என்னூர்	3	0	0
,,	டி. ரங்கஸ்வாமி அய்யங்கார், மாம்பலம்	3	0	0
,,	கே. ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி	3	0	0
,,	வி. ஆர். ராஜகோபாலாச்சாரியர், திருவள்ளூர்	3	0	0
,,	எல். ராஜகோபாலாச்சாரியர், வாலாபேட்டை	3	0	0
,,	ஸ்ரீநிவாஸ நாய்க்கர், சின்ன காஞ்சீபுரம்	3	0	0

ஸ்ரீ. உ. வே,	வி. துரைஸாமி அய்யங்கார், திருப்பதி	3	0	0
,,	சடகோப ராமாநுஜாசாரியர், பட்டுக்கோட்டை	3	0	0
,,	வி. எஸ். பார்த்தஸாரதி அய்யங்கார், மைலாப்பூர்	2	4	0
,,	என். எஸ். ஸ்ரீநிவாஸாசாரியர், குளித்தலை	3	0	0
,,	ராவ்பகதூர் எஸ். வரதாசாரியர், மைலாப்பூர்	5	0	0
,,	குமார சக்ரவர்த்தி அய்யங்கார், கடப்பை	5	0	0
,,	டாக்டர் எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மைலாப்பூர்	5	0	0
,,	எம். எஸ். கிருஷ்ணமாச்சாரியர் ஸ்ரீரங்கம்	5	0	0
,,	டி. எம். வெங்கடாசாரியர், பூனமல்லி	1	4	0
,,	வி. கே. துரைசாமி முதலியார், ஸெகந்திராபாத்	3	8	0
,,	நல்லூர் ஸ்ரீநிவாஸாசாரியார், திருவெட்டிபுரம்	1	0	0
,,	வி. கோவிந்தராஜ அய்யங்கார், தாசி	1	8	0
,,	கே. பி. சேஷாத்ரி அய்யங்கார், ஜியார்ஜ்டவுன்	3	0	0
,,	வி. பட்டாபிராமய்யங்கார் ,,	3	0	0
,,	பி. கோபாலாச்சார்யர் ,,	3	0	0
,,	எம். எ. ஸ்ரீநிவாஸாசாரியர், சிதம்பரம்	3	0	0
,,	ரகுநாத அய்யங்கார், நல்லூர்	3	0	0
,,	டி. சாரங்கபாணி அய்யங்கார், கும்பகோணம்	3	0	0
,,	டி. ஸ்ரீநிவாஸாசாரியர், பார்க்டவுன்	3	0	0
,,	ஆர். நரஸிம்மாசாரியர், மல்லேச்வரம்	3	0	0
,,	வி. துரைஸாமி அய்யங்கார், ஆரணி	3	0	0
,,	கோபால தேசிகாசாரியார், கொடகர்	3	0	0
,,	கே. விஜயராகவாச்சாரியார், திருவல்லிக்கேணி	3	0	0
,,	எஸ். வி. திருவேங்கடாசாரியர். ஸாமக்கவி	3	0	0
,,	ஆர். கோபாலய்யங்கார், எழும்பூர்	3	0	0
,,	பி. சக்ரபாணி அய்யங்கார், பார்க்டவுன்	3	0	0
,,	திருமலை தாதாசாரியர், வெலாம்குப்பம்	3	8	0
,,	தி. மாணிக்கநாயகர், சேலம்	2	8	0
,,	எம். கே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பங்களூர்	1	8	0
,,	கே. எஸ். ரங்கஸ்வாமி அய்யங்கார், மேலப்பாளையம்	2	4	0
,,	பி. கே. கே. பார்த்தஸாரதி அய்யங்கார், முத்தியால் பேட்டை	2	4	0
,,	டி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், மதுரை	5	0	0
,,	எம். எஸ் சேஷய்யங்கார், மதுரை	5	0	0
,,	எஸ். கிருஷ்ணமாச்சாரியர், பங்களூர்	3	0	0
,,	வி. வி. அய்யங்கார், பம்பாய்	3	0	0
,,	டி. பி. சின்ன கிருஷ்ண செட்டியார், சேலம்	3	0	0
,,	எம். வி. வரதய்ய, சேலம்	3	0	0
,,	பி. எஸ். ராகவாச்சாரியர், சேலம்	3	0	0
,,	எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், நுங்கம்பாக்கம்	3	0	0
,,	கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஆத்தூர்	3	0	0
,,	வி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீரங்கம்	3	0	0
,,	எஸ் மதனகோபால அய்யங்கார், திருச்சி	3	0	0
,,	கே. காமாக்ஷி பிள்ளை, கருங்காலி பாளையம்	3	0	0
,,	எஸ். கே. ராமஸாமி அய்யங்கார், மேலப்பாளையம்	3	0	0
,,	எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மேலப்பாளையம்	3	0	0
,,	கே. தேவநாதாசாரியர், பங்களூர்	3	0	0
,,	ஸ்ரீநிவாஸ தாதாசாரியர், தலிகை	3	0	0
,,	கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஈரோடு	3	0	0

[குறிப்பு:—இடமின்மையால் சந்தா செலுத்திய மற்ற எல்லோருடைய பெயரும் இங்கு பிரசுரிக்கப்படவில்லை. அடுத்த ஸஞ்சிகையில் பாக்கி ப்ரசுரிக்கப்படும்.]

ஸ்ரீ மஹாபாரதம்.

—:0:—

வடமொழி வியாஸ பாரதத்திற்குச் சரியான

தமிழ் வசன மொழிபெயர்ப்பு.

200 பக்கங்கள் கொண்ட ஸஞ்சிகைக்கு ரூ. 1 0 0

இதுவரையில் 35 ஸஞ்சிகை வெளிவந்துள்ளன.

பூர்த்தியான பர்வங்கள் கறுப்புக் காலிகோவில் நேர்த்தியாகப் பைண்டு செய்யப்பட்டுள்ளன.

	ரூ.	அ.		ரூ.	அ.
ஆதிபர்வம்	6	0	சல்லிய ஸௌப்திக ஸ்த்ரீபர்வங்கள்	3	0
ஸபாபர்வம்	2	8	சாந்தி பர்வம் முதற்பாகம்	4	0
விராடபர்வம்	2	8	ஷை இரண்டாம் பாகம்	4	8
பீஷ்மபர்வம்	3	8	அநுசாஸந பர்வம்	6	0
துரோணபர்வம்	5	0	ஆச்வமேதிக முதலிய		
கர்ணபர்வம்	3	0	5 சிறு பர்வங்கள்	3	8

இவற்றிற்கு தபால் சார்ஜ் வேறு.

ஸஞ்சிகைகளும் புஸ்தகங்களும் தனித்தனியாகக் கிடைக்கும்.

ப்ரகடன பத்திரிகை, பல அறிஞர்கள் அளித்துள்ள நற்சாக்ஷிப் பத்திரங்கள் முதலியவற்றிற்கு அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மணலூர்
நரசிங்கன் பேட்டை, P.O.
S. I. Ry

எம். வி. ராமாநுஜாசார்யர்,
பதிப்பாசிரியர், மஹாபாரதம்.

சென்னையில் புஸ்தகம் வேண்டுவோர்,

எம். ஆர். ராஜகோபாலய்யங்கார்,
6, புளுமவுஸ், திருவல்லிக்கேணி

என்ற விலாசத்திற்கு எழுதவும்.

186773

30 வருடகாலமாய் உலகப்பிரசித்திபெற்ற

வைத்யரத்ன பண்டிட்

D. கோபாலாச்சார்லு அவர்களின்.

அமிருதாமலகதைலம்

வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தி யுள்ளவருக்கும் அதிக உபயோகமானது.

நேத்ரரோகிகளுக்கும் சிரரோகிகளுக்கும் மிகவும் ஹிதமானது.

சிரஸ்ஸையும் கண்களையும் எப்போதும் காப்பாற்றும்.

எல்லாவித சிரோ ரோகங்களையும் போக்கும்.

பாரிசநோய்களை தூரமாக்கும். கன்னங்கள் நோயை நிர்மூலமாக்கும். பீனஸ ரோகத்தை வரவொட்டாது. மூளைக்கு வலிவை யுண்டாக்கும். காது நோய்களை போக்கடிக்கும். கண்களுக்கும் குளிர்ச்சியையுண்டாக்கும்.

அபஸ்மாரத்தை தூரப்படுத்தும். தலை நரம்புகளுக்கு பலத்தைக் கொடுக்கும்.

நேத்ரரோகங்களுக்கு ஹிதமானது. மூர்ச்சைகளைப் போக்கும்.

தலைப்புண்களை போக்கடிக்கும். மயிரை நரைக்க வொட்டாமற் செய்யும்.

மயிரை பட்டுப்போல் வளரச்செய்யும். நரைத்தமயிரை கருக்கச் செய்யும்.

யோசனை செய்வோருக்கு ரொம்பவும் மேன்மையானது.

தலையிடியை நிர்மூலமாக்கும்.

வித்தியார்த்திகளுக்கு சர்வதா ஹிதம். கர்மரோகிகளுக்கு நல்லதைச்செய்யும். தலை எரிச்சலைப் போக்கும். அதிக நித்திரையைக் குறைக்கும்.

தூக்கமின்மையைப் போக்கும்.

இதன் குணங்கள் அனுபவமடைந்தவருக்குத் தெரியும்.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.

இதை உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாச்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதறாஸ்.

உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

நகை வர்த்தகர்கள்.




தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை

காட்சி அறை.

25, சைனுபஜார் ரோட், மதராஸ்.

நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.



காட்லாக்குக்கு எழுதுங்கள்.



OUR CRITIC'S MOUTH SEALED

BY

U. P. KRISHNAMACHARYA *of Benares.*

(The Greatest Work on Sanatana Dharma. More than 350 pages of closely printed matter)

THE PLAN OF THE WORK.

(1) *Purva Paksha*: All charges against Sanatana Dharma (Religious, Social, Political, etc.,) advanced by Christians, Mohammedans, Bramo Samaj, Arya Samaj, Prarthana Samaj, Radhasami Panth, Deva Samaj, etc., are lucidly presented.

(2) *Siddhanta*: All those charges are exhaustively answered from the theortical point of view.

(3) *Conclusion and Judgment*: Brief answers are made point to point according to the order of the charges gathered in the Purva Paksha.

Latest scientific discoveries are followed strictly in the exposition of the principles of our religion.

Cloth Bound Rs. 3—8—0 **Paper Bound Rs. 3—0—0**

K. S. SRINIVASA IYENGAR,
Paper Mart. MAYAVARAM, S.I.R.

மூளைக் கொதிப்பு! கபால உஷ்ணம்!!

இவற்றைத் தணிக்க ஆற்றலுள்ளது.

அரக்கீரை விதைத் தைலம்

இந்த தைலம், சிறந்த மூலிகைச் சரக்குகளால் தயாரிக்கப்பட்டிருப்பதால் சிரசு நோய்களாகிய கபால உஷ்ணம், மூளைக்கொதிப்பு முதலியவைகளை நிவர்த்தித்து கூந்தலை வளரச்செய்வதுடன், தேகக்குளிர்ச்சியையும், உற்சாகத்தையும், ஞாபகசக்தியும் உண்டாக்கும். 6½-பலம் டின் ரூ. 1-0-0 10-பலம் டின் ரூ. 1-8-0

கடுங்கோடையினின்று தப்புவிக்க வேண்டுமானால், எங்கள்

சந்தனாதித் தைலத்தை

உபயோகிக்கவேண்டும். இது பரிமளமுள்ளது. தலைமயிர் உதிர்தல், சுண்டு விழுதல் இவற்றைத்தடுக்கும். கண்ணெரிச்சலடங்கும். கபால உஷ்ணம் தணியும். மனோல்லாசமுண்டாகி, தேகக் குளிர்ச்சி ஏற்படும். 8-பலம் டின் ரூ. 1. 18-பலம் டின் ரூ. 2. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. இவையன்றி எங்களிடம் கலவைச் சந்தனம், காஜிப்பூர் பன்னீர், உயர்ந்த ஊதுவத்திகள், கேஸர்பவுடர், அத்தர், அரகஜா, பில்லைகள், பரிமளப் பாக்குத்தூள், சுண்ணாம்பு, இதர வாசனை த்ரவ்யங்களும் கிடைக்கும்.

S. V. சாரி & சன்ஸ், அத்தர் வியாபாரிகள்,
71, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை காரியதரிசியால் வெளியிடப்படுவது.